

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER NATIONAL TAMIL DAILY IN SRI LANKA
Registered as a Newspaper at the G.P.O No. QD/133/News/2021 www.virakesari.lk
பிராந்திய,நகரப்பதிப்பு



மலர் : 92 இதழ்: 93 கொழும்பு பிலவ வருடம் கார்த்திகை மாதம் 08 ஆம் திகதி புதன்கிழமை (24.11.2021) ஹிஜ்ரி 1443 ர.ஆகிர் 18 விலை :ரூ.30 பக்கங்கள் : 20

படகுப்பாதை கவிழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 6 பேர் பலி

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் பரிதாப சம்பவம்

அதிகாரிகள்,அரசியல்வாதிகளுக்கு எதிராக மக்கள் போராட்டம்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் படகுப்பாதை கவிழ்ந்ததையடுத்து மீட்பு பணிகள் இடம்பெற்றபோது...
(படம்:திருகோணமலை மேலதிக நிருபர்)

(எம்.மனோசித்ரா)

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பில் படகுப்பாதை கவிழ்ந்ததில் 4 மாணவர்கள் உட்பட 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பாடசாலைக்கு செல்வதற்காக பயணித்த மாணவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகி பலியாகியுள்ளமையினால் இப்பகுதி பெரும் சோகமயமாக காணப்படுகின்றது. 9

புதிய அரசியலமைப்பிலாவது

அதிகார பரவலாக்கலை உறுதிப்படுத்துங்கள்

13 தவிர்ந்த யோசனைகளையே அரசாங்கம் எம்மிடம் கேட்கின்றது;பிரதான எதிர்க்கட்சி சபையில் கடும் விசனம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

ஒருபுறம் மாகாணசபை தேர்தலை நடத்துவதாக கூறிக்கொண்டு, மறுபுறம் 13ஐ ஏற்றுக்கொள்ளமாட்டோம் என தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி தரப்பு எமக்கு கூறுகிறது. இந்த செயற்பாட்டில் 9

எதிர்க்கட்சி முன்வரிசை ஆசனங்களில் ஒற்றர்கள்

ரத்ன தேரர், அலி சப்ரி ரஹீமை இடமாற்றுங்களென எதிர்க்கட்சி வலியுறுத்தல்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

எதிர்க்கட்சியின் முன்வரிசை ஆசனத்தில் ஆளுங்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் இருவருக்கு இடம் கொடுத்து எதிர்க்கட்சிக்குள் ஒற்றர்களை நுழைத்துள்ளனர். 9

குறிஞ்சாக்கேணி படகுப்பாதைக்கு அனுமதி வழங்கியது யார் ?

இம்ரான் மஹ்ரூப் சபையில் கேள்வி

எதிர்க்கட்சி தலைவர், ரவூப் ஹக்கீமும் கண்டனம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை புனரமைத்துத்தருமாறு கோரிக்கைவிடுத்த வேளையில் விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் கேலித்தனமாக கேவலமாக சிரித்தார், அந்த சிரிப்பின் விளைவாக பல உயிர்களை காவுகொடுத்துவிட்டோம் என சபையில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்அனுமதியில்லாதுபடகுப்பாதைக்கு அனுமதி வழங்கியது எவ்வாறு? 9

கிண்ணியா நகரசபையே

அனுமதி வழங்கியது

(எம்.மனோசித்ரா)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி களப்பு பகுதியில் பயணிகள் போக்குவரத்துக்காக படகு சேவைக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 9

கிருமிநாசினிகள் குறித்த பதிவாளர் பதவி நீக்கம்

(இராஜதுரை ஹஷான்)

அரச கொள்கைக்கு மாறாக களைபோசெட் தடையை நீக்கியமை தொடர்பில் கிருமிநாசினிகள் பதிவாளரை பதவி நீக்கி, அவருக்கு 8

படகுப்பாதை விபத்தை திட்டமிட்ட கொலையாகவே கருதுகிறோம்

தவறிழைத்தது யாராக இருந்தாலும் தண்டிப்போம் என்கிறது அரசாங்கம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு சேவையில் சிறுவர்களை அழைத்து செல்லும் வேளையில் உயிர் பாதுகாப்பு கவசங்களை பயன்படுத்தவில்லை 5

போதைப்பொருள் கடத்தலில் பிரபாகரன் ஈடுபட்டார்

அமைச்சர் டக்ளஸ் -கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் சபையில் வாக்குவாதம்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

வடக்கில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் போதைப்பொருள் பாவனை இருந்ததா?கஞ்சா இருந்ததா?அல்லது யாராவது இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டார்களா? போதைவஸ்தால் யாரும் பாதிக்கப்பட்டார்களா அல்லது யாராவது அதனை உட்கொண்டார்களா? 9

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக மஹிந்த சமரசிங்க

இரு நாட்களில் எம்.பி. பதவியை துறந்து 29ஆம் திகதி அமெரிக்கா பயணிக்கின்றார்

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கையை ஏற்று எதிர்வரும் 29 ஆம் திகதி அமெரிக்காவுக்கு 9

ஐ.நா.வின் உதவி செயலாளருடன் கூட்டமைப்பினர் சந்தித்துபேச்சு

பல்வேறு விடயங்கள் குறித்து சம்பந்தன் எடுத்துரைப்பு

அதிகாரப்பகிர்வை மழுங்கடிக்கும் வகையிலேயே ஒரேநாடு ஒரே சட்டத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினை அரசாங்கம் நியமித்துள்ளது. சிங்கள பௌத்த தேசியவாதத்தை பலப்படுத்தும் வகையிலேயே புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவதற்கு அரசாங்கம் முனைகின்றது. இவற்றை தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது 5

புதிய அரசியலமைப்பு நகல் சட்டத்தை சபையில் சமர்ப்பித்து ஆராய்வோம்

எதனையும் மறைத்து செய்யமாட்டோம் என்கிறார் பிரதமர் மஹிந்த

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்கான நகல் சட்டம் தயாரிக்கப்பட்டு வருவதோடு அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆராய இருக்கிறோம். நாம் எதனையும் இரகசியமாக மறைத்து செய்யமாட்டோம். வரவு செலவு திட்டத்தில் எதிரணியின் விமர்சனங்களில் நியாயமானவற்றை ஏற்று திருத்த நாம் தயாராக இருக்கிறோம் என 5

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் :

குற்றப்பகிர்வு பத்திரிகையின் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புகள் தாமதம்

வழக்கு ஜனவரி 12 வரை ஒத்திவைப்பு; 10 பிரதிவாதிகளுக்கு சட்டத்தரணிகள் இல்லை; தமிழ் தெரிந்த சட்டத்தரணிகளின் பட்டியலை சமர்ப்பிக்கவும் கால அவகாசம்

(எம்.எப்.எம்.பஸீர்)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் 25 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்துள்ள வழக்கில், குற்றப் பத்திரிகைகளின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புகள் தயாராக இன்னும் சிறிய கால அவகாசம் தேவைப்படுவதாக சட்ட மா அதிபர் சார்பில் நேற்று 5

தடைசெய்யப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடனும் பேசுவது அவசியம்

மஹிந்த சமரசிங்க சபையில் சுட்டிக்காட்டு

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

புலம்பெயர் தமிழ் அமைப்புகளை மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் புலம்பெயர் அமைப்புகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் தடைசெய்யப்பட்ட தமிழ் புலம்பெயர் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே அவர்களின் நிலைப்பாடும் என்னவென்பதை தெரிந்துகொள்ள முடியும் எனவும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, நடைபெற்ற 8

பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கிய விவகாரம்

கைகலப்புவரை சென்ற வாக்குவாதம்

எதிர்க்கட்சி தலைவரின் குறுக்கீட்டால் நிறுத்தப்பட்டது மோதல்

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசிம்)

பாராளுமன்ற உறுப்பினர் நில்ஸ் குட்டியாரச்சி சபையில் ஆற்றிய உரை பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கிய வகையில் அமைந்துள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கை இடம்பெற்றால் கடுமையாக நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் தெரிவித்த கருத்தை நில்ஸ் குட்டியாரச்சி மறுத்ததுடன் மன்னிப்பு கேட்கவும் மறுத்தார். அதனால் சபையில் ஆளும் எதிர்த்த ரப்புக்கிடையில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றதுடன் கைகலப்புக்கும் சென்றது.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக சபாநாயகர் அறிவிப்பு இடம்பெற்றது. அதில் சபாநாயகர் தனது அறிவிப்பில், நில்ஸ் குட்டியாரச்சியினால் சபையில் பெண்கள் தரப்பை அபகீர்த்திக்குள்ளாக்கி ஆற்றிய உரை தொடர்பில் எனது கவலையை தெரிவிப்பதுடன் இவ்வாறான மோசமான வார்த்தைகளை சபையில் பயன்படுத்துவதில் இருந்து தவிர்த்துகொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கின்றேன் என தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் தலதா அத்துக்கோரள தெரிவிக்கையில், பெண்களை அகௌரவப்படுத்தி சபையில் உரையாற்றிய உறுப்பினரின் கருத்துக்கு எதிராக உங்களது நிலைப்பாட்டை அறிவித்தீர்கள். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இந்த சபையில் எதிர்காலத்திலும் பெண்களுக்கு எதிரான இவ்வாறான மோசமான வார்த்தை பிரயோகத்தை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில், உறுப்பினர்கள் சபையில் பொருத்தமில்லாத வார்த்தை பிரயோகங்களை தெரிவித்தால், அதனை கட்டுப்படுத்தவும் நீக்கவும் இருக்கும் உரிமை சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினருக்கு இருக்கின்றது. அவரே அதனை செய்ய வேண்டும். என்றாலும் நில்ஸ் குட்டியாரச்சி பெண்கள் தொடர்பில் மோசமான வார்த்தை பிரயோகங்களை தெரிவித்தமை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார சபை தலைவருக்கு தெரிவித்தார். ஆனால் சபைக்கு தலைமை தாங்கியவர், தனக்கு அவ்வாறான மோசமான வார்த்தை எதுவும் கேட்கவில்லை என தெரிவித்திருந்தார்.

இதன்போது எழுந்த பாராளுமன்ற பெண்கள் அமைப்பின் தலைவியும் ராஜாங்க அமைச்சருமான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிடுகையில், சபையின் கௌரவத்தை பாதுகாக்கும் பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பேச்சை கேட்டு வெளியில் இருப்பவர்கள் இந்த சபையை மிகவும் மோசமான முறையில் விமர்சிக்கின்றனர். அதேபோன்று சபைக்கு வெளியில் இருக்கும் ஆண்கள், பெண்கள் தொடர்பில் சபையில் விமர்சிக்க இடமளிக்கக்கூடாது. அத்துடன் சபையில் இருப்பது 12பெண் உறுப்பினர்களாகும். அவர்களின் கௌரவத்தை பாதுகாக்கவேண்டும். பெண்களுக்கு எதிராக மறைமுகமான வார்த்தைகளால் இந்த சபையில் ஆற்றிய உரையை நான் கண்டிக்கின்றேன். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் நளின் பண்டார தெரிவிக்கையில், பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கி பேசிய வார்த்தைகளை நீக்குமாறு நான் சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினருக்கு தெரிவித்தேன். என்றாலும் நில்ஸ் குட்டியாரச்சி, தான் அவ்வாறான வார்த்தையை தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்திருந்தால் அந்த வார்த்தைகளை தெரிவிக்குமாறும் அவ்வாறு தெரிவித்தால் தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். தற்போது அவர் பெண்களுக்கு எதிராக மோசமான வார்த்தை பிரயோகங்களை தெரிவித்திருப்பது உறுதியாகி இருக்கின்றது. அதனால் அவர் இந்த சபையில் இருந்து வெளியில் செல்லவேண்டும் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த ரோஹினி குமாரி விஜேவர்த்தன தெரிவிக்கையில், எனக்கு எதிராகவே முறைமுக வார்த்தைகளால் குறித்த உறுப்பினர் தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்திருந்த வார்த்தைகளை ஜனாதிபதியின் பாரியாருக்கு முன்னால் ஜனாதிபதிக்கு கேட்கமுடியுமா என கேட்கின்றேன். அதேபோன்று எனது வாயை அடக்குவதற்கு, எனது குரல் பதிவொன்றை வெளியிடுவதாக தெரிவித்து என்னை அச்சுறுத்துகின்றார். இதற்கு இடம் ளிக்கக்கூடாது என்றார்.

அதனைத்தொடர்ந்து கோபமடைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களான சமித்த விஜேசிறி மற்றும் ஹேஷாவிதானகே நில்ஸ் குட்டியாரச்சிக்கு எதிராக சத்தம்போட்டுக் கொண்டு சபை மத்திக்கு வந்தபோது, ஆளும் தரப்பில் இருந்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அனுருத்த, டி.வி.சானக்க ஆகியோரும் சபை நடுவுக்கு வந்து சச்சரவில் ஈடுபட்டபோது படைக்கல சேவிதர்கள் அவர்களை சமாதானப்படுத்தியதுடன் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் சமித்த விஜேசிறி மற்றும் ஹேஷாவிதானகே ஆகியோரை அமைதிப்படுத்தி,அவர்களது ஆசனங்களுக்கு அனுப்பி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த குறித்த தினத்தில் சபைக்கு தலைமை தாங்கிய அழிந் ராஜபக்ஷ தெரிவிக்கையில், நான் சபைக்கு தலைமை தாங்கும்போது குறித்த உறுப்பினரால் பெண்களுக்கு எதிரான மோசமான வார்த்தைகளை பிரயோகித்தாரா என்பது உண்மையில் எனக்குக் கேட்கவில்லை. உறுப்பினர்களுக்கிடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாலே என்னால் அதனை உணர்த்து கொள்ள முடியாமல்போனது. அதனால்தான், எனக்கு விளங்கவில்லை என்று நான் தெரிவித்திருந்தேன் என்றார்.

அதனைத்தொடர்ந்து மீண்டும் எழுந்த தலதா அத்துகோரள, பெண்களை அபகீர்த்திக்குள்ளாக்கிப் பேசிய உறுப்பினருக்கு எதிராக சபாநாயகராகிய நீங்கள் தெரிவித்த கருத்தை அவர் ஏற்றுக்கொள்வதில்லை என தெரிவித்திருக்கின்றார். அதனால் அவருக்கு எதிராக எடுக்கும் தீர்மானத்தை மறுநாள் எமக்கு அறிவிக்கவேண்டும். குறித்த உறுப்பினர் தான் மேற்கொண்ட மோசமான பேச்சுக்காக சபையில் மன்னிப்பு கோர வேண்டும் என்றார்.

இதற்கு சபாநாயகர், ஆளும் கட்சி சபை முதல்வருடன் கலந்துரையாடி பதில் ஒன்றை அறிவிக்கின்றேன் என தெரிவித்து சபை நடவடிக்கையை கொண்டு சென்றார்.

இருதரப்பு உறவுகள் விரிவாக்கம் குறித்து இத்தாலியுடன் பேச்சு

(எம்.மனோசித்திரா)

இத்தாலி தூதுவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஜரோப்பிய ஒன்றிய ஒத்துழைப்பு மற்றும் விஜயங்களின் பரிமாற்றம் உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் தொடர்பில் இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் இருதரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இத்தாலி தூதுவர் ரீட்டா மனெல்லா, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்த போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

அரசியல் உறவுகள், இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உறவுகளை மேலும் ஒருங்கிணைத்தல், இலங்கை ஜரோப்பிய ஒன்றிய ஒத்துழைப்பு மற்றும் விஜயங்களின் பரிமாற்றம் உள்ளிட்ட பரஸ்பர நலன்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் கட்டிடக்கலை , ஆடை வடிவமைப்பு மற்றும் இத்தாலி உணவு வகைள் உள்ளிட்ட பல்வேறு துறைறைகளில் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் கவும் முடிவு செய்துள்ளது. இதேவேளை இரண்டாம் வாரிப்பு மீதான வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்களான நஸீர் அகமட், பைசால் காசிம், ஹரீஸ் ஆகியோருக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமை ஆராய்து வருகின்றது. இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் செயலாளர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு பித்து பிடித்துள்ளது

பிரதான எதிர்க்கட்சி கடும் விசனம்

(இராஜதுரை ஹஷான்)

விவசாயத்துறை தொடர்பிலான தீர்மானங்களை யார் எடுப்பது என்ற போட்டி அரசாங்கத்திற்குள் காணப்படுகிறது. ஜனாதிபதியின் தீர்மானங்களையும், விவசாயத்துறை அமைச்சின் தீர்மானங்களையும் விவசாயத்துறை அமைச்சர் அறியவில்லை. முழு அரசாங்கத்திற்கும் பித்து பிடித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வாழ்க்கை செலவுகள் நிலைசரி அதிகரித்துள்ள காரணத்தினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். வாழ்க்கை செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் எந்தரப்பினருக்கும் வருவாய் அதிகரிக்கப்படவில்லை.

மரக்கறிகளின் விலையேற்றம் என்றும் இல்லாத வகையில் தற்போது சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உர பிரச்சினை காரணமாக விளைச்சல் குறைவடைந்துள்ளது. அதனால் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன. சேதன பசளை நிட்டத்தினால் விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சினைகளை தற்போது ஒட்டுமொத்த மக்களும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. விவசாயத்துறை தொடர்பிலான தீர்மானங்களை யார் எடுப்பது என்ற போட்டித் தன்மை அரசாங்கத்திற்குள் காணப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட பயிர்களின் பாவனைக்கு மாத்திரம் இரசாயன உரம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார், இரசாயன உரம் இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படவில்லை என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே பாராளுமன்றில் குறிப்பிடுகிறார்.

2014ஆம் ஆண்டு க்ளைபோசட் கிருமி நாசினி பாவனை மற்றும் வியாபாரம் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி அதற்கான வர்த்தமானி அறிவித்தலை கிருமி நாசினிகள் திணைக்கள பதிவாளர் நேற்று முன்தினம் வெளியிட்டார். அவரை பதவி நீக்கியதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று காலை குறிப்பிட்டார். ஆகவே விவசாயத்துறை தொடர்பிலான தீர்மானங்கள் அரசாங்கத்திற்குள் பெரும் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. முழு அரசாங்கத்திற்கும் பித்துப்பிடித்துள்ளது என்றார்.

ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியை உருவாக்கி நாட்டுக்கு தீ மூட்ட அரசு முயற்சி

எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசிம்)

ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை கொண்டு இயக்கிக்கொண்டுள்ளார் எனவும், 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்கே தீ வைக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாகவும் சபையில் குற்றம் சுமத்திய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல, இந்த அரசாங்கத்திற்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துரும்புச் சீட்டு இனவாதம் மட்டுமேயாகும் என வும் விமர்சித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவினத்தலைப்புக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை. பிரதமர் சபையில் உள்ளார், அவரிடமே இதனை கேட்கின்றோம். சமல் ராஜபக் ஷ தலைமையிலான உபகுழு அறிக்கையை எமக்கு வழங்க முடியுமா முடியாதா? ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. ஒவ்வொருவரை இலக்குவைத்து அவர்களை தெரிவுசெய்து வழக்கு தொடுக்கப் படுகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்கு தொடுக்கப்படாது ஜனாதிபதியை குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்கு தோற்கடிக்கப்படும். அதுமட்டுமல்ல ஒரு சிலரது தகவல்களை அரசாங்கம் அழித்துவிட்டது. ஆகவே நீதிமன்றத்தை மிதித்துக்கொண்டு நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடியாது.

மேலும், சகல அமைச்சுகளுக்கும் செயலணிகள் உருவாக்கப்பட்டு அமைச்சரவையை பலவீனப்படுத்தியுள்ளன். ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை கொண்டு இயக்கிக்கொண்டுள்ளார். 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்கே தீ வைக்க முடிவெடுத்துள்ளனர். இனவாதத்தை உருவாக்கி நாட்டுக்கே தீ வைக்கவே நினைக்கின்றனர்.

இந்த அரசாங்கத்திற்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துரும்புச்சீட்டு இனவாதம் மட்டுமே யாகும் என்றார்.

வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்பாளராக கணேசநாதன்

(எம்.எப்.எம்.பஸீர்)

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பொது உறவுகள் தொடர்பிலான இணைப்பாளராக ஒய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.கணேசநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாணத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய அவர், வடமாகாணத்தில் பொது மக்களுடன் நெருங்கிய உறவினை கொண்டுள்ள நிலையிலும், மக்களின் பிரச்சினைகளை மிக நன்கு அறிந்துள்ள நிலையிலும் இவ்வாறு ஆளுநரின் பொது மக்கள் உறவுகள் தொடர்பிலான இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதம் ஆளுநர் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தின் குற்றத் தடுப்புப் பிரிவு, போக்குவரத்து தலைமையகம் உள்ளிட்ட பொலிஸ் திணைக்களத்தின் முக்கிய பிரிவுகளின் பணிப்பாளராக கடமையாற்றிய அனுபவமிக்க ரி.கணேசநாதன், இறுதியாக வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

24 கொவிட் மரணங்கள் பதிவு

(எம்.மனோசித்திரா)

நாட்டில் நேற்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட 24 மரணங்களுடன் மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 14182 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் 15 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 20 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். நேற்று மாலை வரை 542 கொவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய இது வரையில் கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டோர் எண்ணிக்கை 558662 ஆக உயர் வடைந்துள்ளது. இவ்வாறு இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 527528 பேர் குணமடைந்துள்ளனர். 16952 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அடுத்த வருடம் ஆட்சி மாற்றம் நிகழும்

ஐ.தே.க. அதற்கேற்றவாறு தயாராக வேண்டும்; ருவன் விஜேவர்த்தன

(எம்.மனோசித்திரா)

ஆளுந்தரப்பின் உறுப்பினர்கள் தாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தொடர்பு கொண்டு கூறுகின்றனர். அடுத்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது ஐ.தே.க. அதற்கேற்றவாறு தயாராக வேண்டும் என்று கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் படல் கும்புர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய அமைச்சக்களின் செயலாளர்களை அழைத்து சேதன உரக்கொள்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாதவர்கள் இருந்தால் தாராளமாக வெளியேறலாம் என்று கூறுகின்றார். இது புதுமையானதொரு விடயமாகும். இதே நிலை நீடித்தால் அடுத்த ஆண்டு பஞ்சம் ஏற்படும் என துறைசார் நிபுணர்கள் கூறுகின்றனர். செயலாளர் வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதாக அறிவிக்கும் போது அமைச்சரும் ஜனாதிபதியும் அவ்வாறில்லை என்று கூறுகின்றனர்.

அமைச்சர்களே பகிரங்கமாக அரசாங்கத்தை விமர்சிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களுக்கே சமையல் எரிவாயு வைக் கொள்வனவு செய்து கொள்ள முடியாதளவிற்கு புதுமையானதொரு நெருக்கடியான சூழல் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஆளுந்தரப்பினர் அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்ந்தும் முன்னோக்கி பயணிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆளுந்தரப்பின் உறுப்பினர்கள் தாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஐ.தே.க. தலைவரை தொடர்பு கொண்டு கூறுகின்றனர். அடுத்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது எமது கட்சியும் அதற்கேற்றவாறு தயாராக வேண்டும். எமது கட்சியின் கிளைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஐ.தே.க. தலைவர் நிச்சயம் தேவைப்படுகிறார். காரணம் சர்வதேசத்தின் ஆதரவு அவருக்கு காணப்படுகிறது. நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கான தயார்ப்படுத்தல்கள் அவரிடமே உள்ளன. எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் இதனை எவராலும் மறுக்க முடியாது என்றார்.

சுபயோகம்

24.11.2021 மிலவு வருடம் கார்த்திகை மாதம் 08 ஆம் நாள் புதன்கிழமை

கிருஷ்ண பட்ச பஞ்சமி திதி முன்னிரவு 11.50 வரை. அதன்மேல் சஷ்டி திதி. புனர்பூசம் நட்சத்திரம் பகல் 2.22 வரை. பின்னர் பூசம் நட்சத்திரம். சிரார்த்த திதி தேய்பிறை பஞ்சமி. சித்தயோகம் முழுவதும். சமநோக்கு நாள். சந்திராஷ்டம நட்சத்திரங்கள் மூலம், பூராடம். சுபநேரங்களின் காலை 9.30 –10.30, மாலை 4.30 –5.30, ராகுகாலம் 12.00 –1.30, எமகண்டம் 7.30 – 9.00, குளிகை காலம் 10.30 –12.00, வாரசூலம் வடக்கு, பரிகாரம் பால்.

		ராகு	சந்
குரு	தினசரி கிரகநிலை கார்த்திகை 08 புதன் காலை 7.52 க.க சுக்கிரன்		
சனி			
சுக்	சூரி.புத, கேது	செவ்	

மேடம்	– அதிகாரம், சம்பத்து
இடபம்	– சோகம், கவலை
மிதுனம்	– இலாபம், லக்ஷ்மீகரம்
கடகம்	– பயணம், அலைச்சல்
சிம்மம்	– தனம், சம்பத்து
கன்னி	– உயர்வு, மேன்மை
துலாம்	– யோகம், அதிர்ஷ்டம்
விருச்சிகம்	– உதவி, நட்பு
தனுசு	– சுகம், ஆரோக்கியம்
மகரம்	– நட்பு, எதிர்பாராப்பு
கும்பம்	– அன்பு, பாசம்
மீனம்	– நட்பு, உதவி

இன்று வாஸ்து நாள். புனர்பூசம் நட்சத்திரம் ஸ்ரீ இராமனை வழிபடல் நன்று.

சுக்கிரன், கேது கிரகங்களின் ஆதிக்க நாளின்று.

அதிர்ஷ்ட எண்கள் – 5, 1

பொருந்தா எண்கள் – 3, 8

அதிர்ஷ்ட வர்ணங்கள் – மஞ்சள், வெள்ளை

இராமரத்தினம் ஜோதி

(தெஹிவளை ஸ்ரீ விஷ்ணு கோயில்)

இழந்த உறவுகளை நினைவு கூர அனுமதி கொடுங்கள்

நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் இனவாதத்தை முதலில் தூக்கி எறிய வேண்டும் என்கிறார் சிறிதரன் எம்.பி.

(ஆர்.யசி, எம்.ஆர்.எம்.வசீம்)

உயிரிழந்த ஆத்மாக்கள் துயிலும் இல்லங்கள் மீது நீங்கள் சப்பாத்துக் கால்களால் மிதிக்கும்வரை இந்த நாட்டில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் இனவாதத்தை முதலில் தூக்கி எறிய வேண்டும். எமது மக்கள் இழந்த தமது உறவுகளை நினைவுகூர அனுமதி கொடுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.யான எஸ்.ஸ்ரீதரன் பிரதமர் முன்னிலையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமிழர்களின் பிரதேசங்களில் யுத்த காலத்தில் தமது உயிர்களை தியாகம் செய்த தமது குழந்தைகள், மாவீர்களை அந்த மக்கள் நினைவேந்துவார்கள் என்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்கள் முன்பாகவும் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களின் மனங்களில் கலாசார ரீதியாக,பண்பாட்டு ரீதியாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்ற தமது வீரப் புதல்வர்களை மறக்கக்கூடியதொரு சூழல் வருமா? அல்லது சிங்கள மக்கள் இதனை விரும்புகின்றார்களா?

2016,2017,2018,2019 களில் கூட, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019இல் ஜனாதிபதி பதவியேற்ற பின்னரும் கூட எமது மக்கள் மிகவும் அமைதியாக மாவீரர் தினத்தை அனுஷ்டித்தார்கள். எந்தவிதமான இடைஞ்சலும் இந்த நாட்டில் ஏற்படவில்லை. இங்கே பல அமைச்சர்கள் விழாக்களை நடத்துகின்றார்கள். விளையாட்டுப்போட்டிகள் நடக்கின்றன. இதற்கெல்லாம் எந்தக் கொரோனாவும் இல்லை. ஆனால் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் மட்டும் தான் கொரோனா வருமென அந்த இடங்களில் இராணுவம், பொலிஸாரை குவித்து ஒரு அச்சுறுத்தலை, யுத்த பிரதேசங்கள் போன்று இன்று வடக்கும் கிழக்கும் காணப்படுகின்றன.

தயவு செய்து இந்த நிலைகளை மாற்றுங்கள், முதலில் புரிந்துணர்வு வேண்டும். நாட்டில் ஒரு இணக்கப்பாடு வேண்டும் என்றால் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம். ஆகவே நாம் எமது பிள்ளைகளை நினைக்கின்ற வணக்க முறைகளை நீங்கள் தடுப்பதன் மூலம் நீங்கள் எதனை அடையப்போகின்றீர்கள். அன்புக்குரிய சிங்கள மக்கள் கூட இதனை எதிர்க்கவில்லையே? 2016,2017,2018,2019 ஆண்டுகளில் எங்கேயாவது ஒரு சிங்கள பிரதேசத்திலே மாவீரர் தினத்துக்கு எதிராக சிங்கள மக்கள் யாரும் ஊர்வலம் கூட நடத்தவில்லையே? ஆனால் இந்த நாட்டிலே அரசியல் தேவைக்காக ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரை தமது அரசியல் தேவைக்காகவே இதனை செய்கின்றார்கள் என்ற விடயம் இப்போது தெளிவாகத்தெரிகின்றது. ஆகவே இதிலிருந்து மாறுங்கள்.

மாவீரர்கள் புதைக்கப்பட்டிருக்கும் துயிலுமில்லங்களில் எல்லாம் இராணுவத்தினர் முகாம் அமைத்து சப்பாத்துக் கால்களுடன் பந்து விளையாடுகின்றார்கள். உங்களுடைய ஒரு குழந்தை அல்லது உங்களுடைய ஒரு சிங்கள வீரன் புதைக்கப்பட்ட இடத்தில் தமிழ் இராணுவத்தை சேர்ந்தவர்கள் இவ்வாறு நடந்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதனை நீங்கள் இந்த நாட்டின் தலைவராக, தந்தையாக, இந்த நாட்டை சீரமைக்க நினைக்கின்ற ஒரு மனிதனாக நினைத்துப்பாருங்கள். இதே நிலையில் தான் இந்த நாட்டில் உள்ள ஏனைய இனங்களின் மன நிலையும் என்பதனை புரிந்து கொண்டால் இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக இலகுவாக ஏற்படுத்தக்கூடியது. அமைதி, பொருளாதாரம் என்பனவற்றை இலகுவாக கட்டி வளர்க்கலாம்.

நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்காமலே பொலிஸார் தடைக்கட்டளைகளை கொண்டு வந்து தருகின்றனர். பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்துள்ளன. ஆகவே நீதிவான் கட்டளை இல்லாமலேயே, நீதிமன்றங்கள் அறிவிக்காமலேயே பொலிஸார் கட்டளைகளை வழங்குகின்றார்கள்.

கையெழுத்து வாங்குகிறார்கள். இந்த நாடு மிக மோசமாகவுள்ளது. நாட்டின் நடவடிக்கைகள் பாதகமான சூழலில் போய்க் கொண்டிருக்கின்றது. தயவு செய்து சிந்தியுங்கள். இந்த நாட்டை அமைதிப்பூங்காவாக்க வேண்டும் என்றால் மாவீரர்களை நினைவு கூருவதற்கு தடையில்லை என்பதனை அறிவியுங்கள் என்றார்.

1956இல் தமிழ் மக்களை பழிவாங்கியது போன்று

முஸ்லிம்களை பழிவாங்கும் நோக்கிலே ஒரு நாடு ஒரு சட்டம் செயலணி

ரவூப் ஹக்கீம் சபையில் குற்றச்சாட்டு

(ஆர்.யசி,எம்.ஆர்.எம்.வசீம்)

நாட்டில் 1956இல் மொழி சட்டத்தை கொண்டுவந்து தமிழ் மக்களின் உரிமையை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோன்று, ஒருநாடு ஒரு சட்டம் தொடர்பான செயலணியின்மூலம் முஸ்லிம் மக்களை பழிவாங்க மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு-செலவு திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவினத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், ஒருநாடு சட்டம் தொடர்பான ஆணைக்குழு நியமனம் தொடர்பாக நாட்டுக்குள் பாரியதொரு குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் உண்மைத் தன்மை என்ன?. எண்பது தொடர்பில் தேடிப்பார்க்கவேண்டும். இந்த நடவடிக்கையும் 1956 இல் ஏற்படுத்தப்பட்ட சிங்களம் மட்டும் அரச கரும மொழியால் நாட்டில் ஏற்பட்ட குழப்பமான நிலையைப் போன்றதொரு நிலைமைக்கான வழியை ஏற்படுத்துகின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

1956இல் ஆங்கில மொழியை கட்டிப்பிடித்துக்கொண்டு தமிழ் மக்களின் மொழி உரிமையை இல்லாமலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று தற்போது முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து ஒருநாடு ஒருசட்டம் என்ற செயலணியின் பின்னால் இருந்து மேற்கொள்ளப்போகும் உண்மை நோக்கம் என்ன? சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கமையவே இந்த செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது என சிலர் விளங்கிக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறு இல்லை. சட்டத்தில் சமம் இல்லை என்ற மோசமான கருத்தை முன்னிலைப்படுத்தியே இதனை செய்யப்போகின்றது என்றே நாங்கள் காண்கின்றோம்.

நாட்டில் அனைவருக்கும் சமமான சட்ட அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறான சட்ட கட்டமைப்பொன்று இல்லாமலா நாங்கள் வாழ்கின்றோம். நாட்டின் அரசியலமைப்பில் சமத்துவம், நீதிமன்ற சுயாதீனம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஒவ்வொரு பிரஜையும் சமமானவர்கள் என அரசியலமைப்பு தெரிவிக்கின்றது. அப்படியாயின் ஒருநாடு ஒருசட்டத்தின் நோக்கம் என்ன? அதேபோன்று எமது தண்டனைச்சட்டத்தில் அதிகமான சட்டங்கள் வெளிநாட்டு சட்டங்களுடன் தொடர்புபட்டே இருக்கின்றன.

எனவே ஒரு சமூகத்தின் தனியார் சட்டம் தொடர்பாக இருக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளை அடிப்படையாக்கொண்டு மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பத்தை, விரிசலை ஏற்படுத்தி, அதன்மூலம் அந்த உரிமைகளை இல்லாமலாக்க எடுக்கும் முயற்சியாக, வைராக்கியம் குரோதத்தை வளர்க்கும் நேரர் ஒருவரை குறித்த செயலணிக்கு தலைவராக்கி, மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கையால் மீண்டுமொரு முறை 1956இல் ஏற்படுத்தியது போன்று முஸ்லிம் மக்களை பழிவாங்க மேற்கொள்ளும் நடவடிக்கையாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம் என்றார்.

புதிய களனி பாலம் ஜனாதிபதி, பிரதமரால் இன்று திறப்பு

(எம்.மனோசித்ரா)

இலங்கையில் முதற்தடவையாக உயர் தொழில்நுட்ப கேபிள்களின் மேல் அமைக்கப்பட்ட புதிய களனி பாலம் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை திறக்கப்பட்ட பின்னர் கொழும்பு நகரம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் என்பன ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டதால் கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனால் அதிகரித்த வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப தற்போதைய களனி பாலத்தின் கொள்ளளவு போதுமானதாக இல்லாததால் 2014 ஆம் ஆண்டு இலங்கையில் முதற்தடவையாக அதி தொழில்நுட்ப கேபிள்களை பாவித்து புதிய களனி பாலம் அமைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் பழைய களனி பாலத்துக்கு அண்மையில் ஆறு தடவழிகளை

கொண்ட புதிய பாலம் அமைக்கும்பணி பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் பாதை அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை ஆரம்பிக்கும் இடத்திலிருந்து பேலியகொடை பாலத்தின் சந்தியை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த புதிய களனி பாலம் அமைக்கும் திட்டம் ஒருகொடவத்த சந்தியிலும் மற்றும் துறைமுக நுழைவு சந்தியிலும் நிறைவடைகின்றது.

கட்டுநாயக்க அதிவேக பாதையில் கொழும்பு பக்க முடிவிலிருந்து பண்டாரநாயக்க சுற்றுவட்ட பாதை வரை ஆறு தடவழிகளை கொண்ட இந்த பாலம் அங்கிருந்து ஒருகொடவரையும், இங்குருகுடைசந்தி வரையும், துறைமுக நுழைவு பாதை வரையும் நான்கு வழித்தடங்கள் கொண்ட பாதையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. களனி கங்கைக்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ள இந்த பாலத்தின் நீளம் 380 மீற்றர் ஆகும். இப்பாலம் இரண்டு தொகுதியின் கீழ் அமைக்கப்பட்டது. முதலாவது தொகுதியில் உருக்கினால் ஆன பாலத்தின் பகுதிக்கு 31,539 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் இரண்டாவது தொகுதியில் கொங்கிரீட் தொங்கு பாலம் பகுதிக்கு 9,896 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது என பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உங்கள் குழந்தையை
உங்கள் கைகளில் ஏந்தி மகிழ
இனி எந்தத் தடையும் இல்லை.
சென்னையுறைக் கருத்தரிப்பு சிகிச்சையில்
நான்கு தசாப்த கால அனுபவம் பெற்ற
கைராசியான வைத்திய நிபுணர்
டொக்டர் கீதா ஹரிப்ரியா
அவர்களை உங்களது வீட்டில்,
உங்கள் அலைபேசியில் நேரலையில்
உரையாடி ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.
ONLINE CONSULTATION AVAILABLE!
மேலும் விபரங்களுக்கு:
0777 215588
0754 000012
ONLINE CONSULTATION
நவம்பர்
28
உங்கள் தாய்மைக் கனவை நனவாக்கிக்கொள்ளும் பயணத்தை உடனே ஆரம்பித்திடுங்கள்.
பிரசாந்த் மருத்துவமனைகள்
தகவல் மையம்
62, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை.
infoptfrccsl@gmail.com | www.pfrcivf.lk

குழந்தையின்மைக்கான சிகிச்சையில்
முதல் படி, அதிநவீன IUI சிகிச்சை!
● உலகத்தரத்தில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன்
● குழந்தைக்கனவை நனவாக்கும் Intra Uterine Insemination சிகிச்சை
● ரோயல் மருத்துவமனையில் குறைந்த கட்டணத்தில் பெறலாம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு–06
0760 155 883

இன்றைய சிந்தனை

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது
(திருக்குறள்)

தனக்கு ஒப்பை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக் கவலையை மாற்ற முடியாது.

VIRAKESARI
வீரகேசரி
2021 நவம்பர் 24ஆம் திகதி புதன்கிழமை
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிட்டெட்,
267, ரஜ மாவத்தை, எக்கல, ஜா-எல. Tel. : 011 7322750, 011 7322751,
011 7322754, 011 7322755, 0117322736
Fax : 011 7322752 Web Site : www.virakesari.lk
E-mail : editordaily@virakesari.lk, kesari25@virakesari.lk
News On-line : onlinenews@virakesari.lk Advertisment : advertising@virakesari.lk
Circulation : circulation@virakesari.lk

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுவது அவசியம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 153 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் நேற்று முன்தினம் பாராளுமன்றில் அளிக்கப்பட்டதுடன் 93 மேலதிக வாக்குகளினால் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹுமான் மற்றும் டயானா கமகே, அரவிந்தகுமார், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப் ஆகியோர் வாக்களித்தனர். அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் ஹாசிம் நஸீர் அஹமட் ஆகியோரும் பட்ஜட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மேலும் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி,இராசமந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பன எதிர்த்து வாக்களித்தன. அதன்படி நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்நிலையில் மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பான விடயங்கள் இந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ள டக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று ஆசிரியர்களை தவிர்த்து அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு வேலைத்திட்டங்கள் இல்லை என்றும் டொலர் உள்வருகையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றது. அதேபோன்று பல்வேறு பொருளாதார நிபுணர்களும் இதன் ஒரு சில விடயங்களை வரவேற்றாலும்கூட பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பாகவும் டொலர் நெருக்கடி தொடர்பாகவும் எந்தவிதமான தீர்வுகளும் முன்வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர். முக்கியமாக உணவு பாதுகாப்பு தொடர்பாக எந்தவிதமான ஒரு ஆக்கபூர்வமான ஏற்பாடுகளும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அத்துடன் வடக்கு, கிழக்கு மலையக பிரதேசங்களுக்கான அபிவிருத்திக்கு எந்த முனைப்புக் காட்டப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சூழலிலேயே தற்போது வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இந்த விவாதத்தின் இறுதியில் உரையாற்றிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக் ஷ அரச சேவை சம்பள முரண்பாட்டை தீர்க்க புதிய சம்பள முறையொன்றை தயாரிக்க இருக்கிறோம்.சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு யோசனை முன்வைத்து தேவையான மாற்றம் செய்வோம், வடக்கு, கிழக்கு பிரதேச எம்.பி.க்கள் தமது பிரதேசங்களுக்கு விசேட திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். முழு நாட்டையும் ஒன்றாக கருதி வடக்கு, கிழக்கு உட்பட 14021 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் 4917 உள்ளூராட்சி பிரிவுகளுக்கும் கட்சி,இன,மத, குல பேதமின்றி ஒரே அளவான நிதி வழங்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் வடக்கு,கிழக்கு பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. வவுனியாவுக்கு அப்பால் மின்சாரம் இருக்கவில்லை. மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கத்தில் 24 மணிநேரமும் மின்சாரம் வடக்கிற்கு வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக் ஷவின் பட்ஜட் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளுக்கு பாராளுமன்றத்தில் அவர் பதிலளித்திருக்கிறார். முக்கியமாக வடக்கு, கிழக்கில் தமது முன்னைய அரசாங்கத்தில் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தற்போதுகூட முழு நாடு என்று கருதியே வடக்கு கிழக்கிலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். உண்மையில் முழு நாடும் சமமானது என்ற அடிப்படையில் இவ்வாறு வரவு செலவுத்திட்டத்தை முன்வைப்பதும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதும் சிறந்ததாகும். ஆனால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களை பொறுத்தவரையில் அங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கின்றனர் என்பதையும் அங்கு யுத்தத்தில் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அதுமட்டுமன்றி அந்த பகுதிகளில் பொருளாதார ரீதியாக பாரிய நெருக்கடிகள் இன்னும் காணப்படுகின்றன. முக்கியமாக தொழில் வாய்ப்புக்கள் பிரச்சினையாக இருக்கின்றன. இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

தென்னிலங்கையில் போன்று உடனடியாக தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி வடக்கு கிழக்கில் இல்லை. காரணம் அங்கு புதிய முதலீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் அங்கு புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியாத நிலைமை இருக்கின்றது. வடக்கு, கிழக்கு பகுதிகளை பொறுத்தவரையில் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கானமுதலீடுகளை மேற்கொள்வதற்கானவேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கான திட்டங்கள் பட்ஜட்டில் உள்ளடக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. அதாவது வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை, வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டங்கள், அவற்றை மேலும் பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன் வைக்கப்படவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படுகின்ற கிராம சேவகர் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கது. ஆனாலும் அங்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான, மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதேபோன்று மலையகம் தொடர்பாகப் பேசப்படுகின்றது. மலையகத்தில் கிட்டத்தட்ட 150 வருடங்களுக்குமேலாக மக்கள் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அபிவிருத்தி பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை, சம்பள நெருக்கடி, கல்வி, சுகாதாரம் என பல்வேறு வகையான பிரச்சினைகளை அந்த மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அவற்றை தீர்த்து வைப்பது தொடர்பாகவும் ஆக்கபூர்வமான திட்டங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் இல்லை என்ற விடயம் மலையகப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படுகின்றது. இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்து செல்கின்ற நிலையில் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மிக அவசியமாகும். நேற்று முதல் வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சுக்களுக்கான செலவுகள் தொடர்பான குழுநிலை விவாதங்கள் நடைபெறுகின்றன. எனவே வரவு செலவுத்திட்டத்தின் இறுதி வாசிப்பு நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக இந்த விடயங்களில் திருத்தங்களை செய்ய முடியுமா என்பது தொடர்பாக ஆராய வேண்டும். விலை உயர்வால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற பொது மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது மிக அவசியமாகும். முக்கியமாக பொருட்களின் விலை உயர்வானது டொலர் நெருக்கடியினால் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே டொலர்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அது தொடர்பாக பொருளாதார நிபுணர்கள் முன்வைக்கும் யோசனைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவது முக்கியமாகும். எனவே விரைவாக மக்களின் வாழ்க்கைச் செலவு கணமையை குறைப்பதற்கும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொருளாதார வலுவூட்டல்களை மேற்கொள்வதற்கும் மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழ்க் கட்சிகள், அமைப்புகள் தமது பொறுப்புணர்ந்துசெயற்படுகின்றனவா?

வரலாறுஎன்பதுநாம் கடந்துவந்தபாதையில் விட்டதவறுகளைச் சீர்செய்துகொள்ளவும்,தொடர்ந்துதவறுகள் செய்யாமலிருக்கவும் வழிகாட்டும் பாடமாகும். இந்தவகையில் நோ் கற்றுக்கொள்ளவேண்டியபாடங்கள் பலஉள்ளன. அதிலும் குறிப்பாக சமூகம் சாா்ந்த உரிமையை, இருப்பை,பெருமையைநிலை நாட்டும் அரசியல் வரலாற்றுப் பாடத்தை நாம் கற்றுநன்குபுரிந்துகொண்டு செயற்படுவது அவசியமாகும்.

நலிந்தநிலையிலுள்ளநம்மினத்தின்,நம் நாட்டின் சீரமைப்புக்குநமதுசிந்தனையில் மாற்றம் ஏற்படவேண்டும். தவறுகள் கண்டறியப்பட்டுதிருத்தப்படவேண்டும். அதுவே நாகரிகமும் கூட. வரலாறறிலிருந்து கற்றபாடங்களில் விட்டதவறுகளை இனங்கண்டு திருத்தி உரியவழியில் பயணிப்பதே அறிவுபூா்வமானது.ஆக்கபூா்வமானது. இந்நிலையிலேதமிழ் மக்கள் வளமான,நிம்மதியான வாழ்வுக்குதமிழ் மக்கள் மத்தியிலே பல்கிப் பெருகியுள்ளஅரசியல் தொழிசங்க மற்றும் சமூகஅமைப்புக்களின் பங்குமுக்கியமானது.

நம்மைநாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்தநாட்டின் குடிமக்கள் என்றரீதியில் பெற்றுக்கொள்ளவேண்டிய உரிமைகள் எவை என்பதையும்,எக்குமறுக்கப்பட்டுள்ளஉரிமைகள் எவைஎன்பதையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்களுக்குபல்வேறுபிரச்சினைகள் உண்டென்று தமிழ் மக்களைபிரதிநிதித்துவப் படுத்தும் அரியல்,தொழிற்சங்க,சமய,சமூக அமைப்புக்கள் யாவும் ஏற்றுக்கொண்டுள்ளன. அவ்வாறு கூறியும் வருகின்றன. ஆனால் அவைஎவை? அவற்றைத் தீா்த்துக்கொள்ளக் கூடியவழிமுறைகள் எவைஎன்றதைமட்டும் எவரும் கூறுவதுமில்லை. அவற்றைப் பெரிபுபடுத்துவதுமில்லை. இவை தம்மத்தியிலே பல்வேறுவகையானபோட்டிகளில் ஈடுபட்டு சமுதாயத் தேவைகளை இரண்டாமிடத்திற்கு தள்ளிவிடுவதையேசெய்கின்றன. சமுதாயப் பிளவுகளால் உரிமைக் கோரிக்கை மழுங்கடிக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் எதிா்நோக்கியுள்ளபிரச்சினைகள்,தேவைகள் சரியானமுறையில் தெளிவாக இனங்காணப்படுள்ளனவா என்றால் அதற்கானபதிலை..றுதியாகக் கூறும் ஆற்றல் சமூகவழிகாட்டிஎன்னிறும் நம்மிடையேவரல வருபவா்கள்,வாக்குகேட்பவா்கள் எவரிடமும் இல்லை. இதுவேஉண்மை நிலை,யதாா்த்தநிலை.

தமிழ் மக்களின்உரிமைகளைபெற்றுக் கொடுக்க,மீட்கவென்றுதிடீா் திடீரென்றுபல் வேறுஅரசியல் மற்றும் அமைப்புகள் தோன்றிவருகின்றன. வீரவசனம் பேசுகின்றன. அறிக்கைகள் விடுகின்றன. ஏற்கனவே இருப்பவா்களுக்குசமூகத் தேவைகள் தொடா்பான அறிவோ,பிரச்சினைகளைத் தீா்த்துவைக்கும் ஆற்றலோ இல்லையான்றவினா சிந்திக்கும் ஆற்றல் கொண்ட சீ்தூக்கும் அறிவுகொண்ட ஒவ்வொருவா் மத்தியிலும் இயல்பாகஎற்பட வேண்டும்.

இலங்கையில் ஏனைய சமூகங்களோடுஒப்பிடும் போதுஅரசியலிலைகட்டும்,தொழிற்சங்க ரீதியிலகட்டும் பல்கிப் பெருகியஅரசியல் கட்சிகளையும்,தொழிற்சங்கங்களையும் கொண்டசமூகமாகத் தமிழ் சமூகம் விளங்குகின்றது. நம் மத்தியிலேபுதியபுதியஅரசியல்,தொழிற் சங்கஅமைப்புக்கள் முளைவிடுவதால் சமுதாயநன் பலமடையுமா,பாதிக்கப்படுமா என்பதுதொடா்பில் அவதானிக்கவேண்டும். அரசியல்வாதிகளேசமூகம்தன் தலைவிதியைநிா்ணயிக்கின்றாா்களேயன்றிசமூகத்திலுள்ளபுத்திஜீவிகளோ,ஆய்வாளா்களோ,தன வந்தா்களோ,சமயப் பிரமுகா்களோ,சமூக சேவையாளா்களோ,வேறுஎவருமோ,அல்ல. ஒருநாட்டின்,சமூகத்தின் தலைவிதியைநிா்ணயிக்கும் ஆற்றல் கொண்டஅரசியல் புனிதமாக இருத்தல் வேண்டும். புனிதப்படவேண்டும். புனிதப்படுத்தப்படவேண்டும்.

முன்னாளில் நாட்டின் அரசாட்சியைக் கொண்டுநடத்தியமன்னா்களை இறைவனுக்கு அடுத்துவைத்துப் போற்றியமரபின் உரிமையாளா்கள் நாம். நீதிநெறிதவறாது, சுயலாபம் நோக்காதுமக்கள் பணியேமுகேசன் பணிஅதாவது இறைபணியென்றுவாழ்ந்து,அரசாட்சிசெய்த இனம் தமிழினம். நமது இந்துமதயபுராண இதிகாசங்களிலும் அரசாட்சியின் சிறப்பு,ஆளும் முறைமைன்பன தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழா் வரலாற்றிலும், இந்துசமயவரலாற்றிலும் தா்மநெறிதவறாதஅரசாட்சியின் மாண்புடலகக்குஎடுத்துக் கூறப்பட்டுள்ளது. எப்படியும் ஆளலாம் என்றில்லாமல் இப்படித்தான் ஆளவேண்டும் என்றவரைவிலக்கணத்தைஎலகிற்குவழங்கியபரம்பரையினா் நாம்.

இவற்றைமனதில் கொண்டுநம்மவா்கள் அரசியல் நடத்துவது, ஆள முனைவதுபொருத்தமானது. பொறுப்பானதும் கூட. அன்று அரசபரம்பரைஅற்றுவிட்டநிலையில் பட்டத்து யானைஆளத் தகுதியானவரைத் தேடவந்துமாலையிட்டுஅரசகட்டிலிலேற்றும் வரலாறாயுள்ளது.

த.மனோகரன்
(அகில இலங்கை இந்துமாமன்றத் துணைத்தலைவா்)

இன்று ஜனநாயகநாட்டில் எல்லோரும் மன்னா்கள் என்றாகிவிட்டநிலையில் எல் லோருமேஅரசாளத் தகுதிகொண்டவா்களாகக் கொள்ளப்படுகின்றனா். தம்தைாமேமன்னா் களென்றுமக்கள் முன்வருகின்றனா். அன்றுயானைமாலைப் போட்டுதகுதியானவரைத் தெரிவுசெய்வதுபோல்நிறுமக்கள் தம் நிலைத்தவா் களைத் தெரிவுசெய்வது ஜனநாயகம் என்று கூறப்படுகின்றது. அன்றையபுடியயாட்சியின் றையதுமக்களாட்சி.

நாட்டின் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளமொழியுரிமையைஉரியயடிநடைமுறைப்படுத்தும்படிஎவருமேஅதிகாரரபீடத்துடன் தொடா்புகொள்ளவில்லை. கோரிக்கைவைத்த தாகவும் தெரியவில்லை. உண்மைநிலை இது வாகவேயுள்ளது. இதுநம்மினம் செய்தபாவம். சாபக்கேடுஅல்லவா? வேறுவப்படிஎமதுஆசங்கத்தை வெளிப்படுத்துவது?

சா்வதேசமட்டத்தில் போட்டியிடக் கூடியதாக இலங்கையின் கல்விவளா்ச்சிகண்டுவருகின்றது. நமதுநிலையோபரிதாபத்திற்குரியதாயுள்ளது. தமிழக் கல்விதமிழ் கல்விதொடா்பாகநமதுஅரசியல் தலைவா்கள் எவராவதுஅண்மைக் காலத்தில் காத்திரமாகக் குரல் கொடுத்ததாயில்லை. கொடுப்பாா்கள் என்று நம்பக்கூடியதாயும் எதுவும் தோன்றவில்லை.

தமிழிமொழி மூலம் கல்விகுறிப்பாகத் தமிழா் கல்விதேசியரீதியில் ஒப்பிடும்போதுமிகவும் பின்தங்கியேயுள்ளது. கல்விநிலைதொடா்பில் கவனம் செலுத்தாதவா்கள் எவ்வாறுசமூகத் தலைவா்கள் என்றபட்டியலில் இடம்பெறமுடியும்? தேசியரீதியில் அரசத் துறையில் தமிழா்களுக்குஉரியதொழில் வாய்ப்புகள் கிட்டுவதில்லை. இதேபோன்றுவங்கிகள், கூட்டுத்தாபனங்கள்,சபைகள் போன்றவற்றின் நிலைமையுள்ளது. சிற்றூழியா் நியமனங்கள் கூட உரியபடிகிட்டுவதில்லைஎன்பதற்குத் தமிழ் பாடசாலைகளுக்கானசிற்றூழியா்களாக வேற்று இனத்தவரேநியமிக்கப்பட்டுவருவது சான்றாகவுள்ளது.

பெருந்தோட்டஅலுவலகங்களில்கூட தமிழா்களுக்குமாதாந்தசம்பளம் பெறும் பதவிகள் கிட்டுவதில்லை. வெளியருக்கேநியமனங்கள் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது தொடா்பில் பெருந்தோட்டதுறைசாா் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்,தொழிற்சங்கத்தினா் கவனம் செலுத்தவில்லை. தொழில் வாய்ப்பை இழந்தநிலை அதாவதுபுறக்கணிப்புக்களின்காரணம் நிலைத மிழா்களுக்குள்ளதுஎன்பதுநம்மவா்களுக்குப் புலப்படுவதாகவும் தெரியவில்லை.

நாட்டின் எங்கோஒரு மூலையிலாவது வதாவது இனவெறிப் பயங்கரவாதத்தால் தமிழா்கள் பாதிக்கப்படுவதுவழக்கமாயுள்ளது. இது தொடா்பில் கவனம் செலுத்தியவா்களுடன் தொடா்புகொண்டுஇவ்வாறானசெயற்பாடுகளைநிறுத்தஉறுதியானநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியபொறுப்புகவனத்திலே கொள்ளப்படுள்ளதா? அறிக்கைவிடுவதுடன் அடங்கிவிட்டால் துன்பங்கள் தீருமா?

இதேபோல் அடிப்படைஉரிமைகள், தேவைகள் பலநிறைவேற்றப்படவிருதலும் அவற்றைபுறந்தள்ளித் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைப்பதும்,வாக்குகளை கூறு போட்டுஅரசியல் ரீதியில் சக்தியிழக்கச் செய்வதுமேநம்மவா்களின் அரசியல் விளையாட்டாக உள்ளமையைப் புத்தியுள்ளவா்களால் மட்டுமே புரிந்துகொள்ளமுடியும்.

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. தன் அரசியல் எதிரிக்குஅநாவதுதன் அரசியல் போட்டியாளரானதன் சமூகத்தவன் அரசியல் அதிகாரத்தைப் பெறக்கூடாது. இழக்கவேண்டும்.அழியவேண்டும் என்ற போக்கும்,நோக்கும் மேலோங்கியநிலையில் நமதுதமிழ்ச் சமூகம் பின்னடைவைஎதிா்நோக்கியுள்ளது. இதுநடைமுறையில் காணப்படும் யதாா்த்தம்.உண்மைநிலை.

தமிழ் மக்களைபிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் நமதுஅரசியல்வாதிகள் சிந்திக்கவேண்டும். தமது செயற்பாடுகளால் சமூகத்தின் ஒற்றுமை பேணப்படுகின்றதா? மேன்மைப்படுத்தப்படுகின்றதா? அல்லதுகாவுகொடுக்கப்படுகின்றதா என்பதை எண்ணிப் பாா்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் இந்நாட்டின் சிறுபான்மை யினத்தவா்கள். நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் சக்தியற்றவா்கள். அதனால், தமக்குரிய உரிமைகளைத் தெரிந்துகொள்வதற்கும்,பெற்றுக்கொள்வதற்கும், பாதுகாத்துக்கொள்வதற்கும் சமூகஒற்றுமை அவசியமானது. அதை அரசியல் செய்வோா் கெடுத்துவிடக் கூடாது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழியும், பஞ்சதந்திரக் கதைகளி லொன்றாகிய சிங்கமும் எருமைகளும் என்றகதையும் நமக்குவழிகாட்டு பவையாக, சிந்தனையைத் தூண்டுபவை யாக இருத்தல் வேண்டும். அவைநமக்கு புத்திக்கெட்டும் தத்துவங்களாய் அமைந்துள்ளன.

நம் மத்தியிலேநிலவும் போட்டிஅரசியல் ,தொழிற்சங்கவிளையாட்டுக்கள்பூனைக்கு க் கொண்டாட்டம்எலிக்குத் தின்டாட்டம் என்பதுபோல் எலியின் நிலைக்குநம்மைத் தள்ளிவேடிக்கைப் பாா்க்கவைத்துள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

ஊா் இரண்டுப்பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதும் நம் மத்தி யிலே பலகாலம் வழங்கிவரும் அறிவுதரும் கூற்று. தமிழா்கள் கூறுபட்டால் தமிழா்கள் பயன் பெறுவாா்களா? பயனை இழப்பாா் களா? சிந்திக்கவேண்டியது நம்மவா் பொறுப்பு. சிந்திக்கமறுத்தால்,மறந்தால் வேதனையைக் கட்டி அணைக்க வேண்டி வருவது ,தவிா்க்கமுடியாததாகும். இதைஎவராலும் தடுக்கமுடியாது.

உரிமைக்கு இணைந்துகுரல் கொடுப்போம். உறவுக்குகுரலிநந்துகைகொடுப்போம். சமுதாயநலன் கருதிப் பேதங்களை மறப்போம். ஒன்றுபட்டுச் செயற்படுவோம் என்றஅரசியல் பக்குவம்,தன்னலம் கடந்தநாகரிகசிந்தனைநம்மத்தியிலே,நம்மவா் மத்தியிலேவலுப்பெறவேண்டும். அப்போதுதான் நமக்குமீட்சி.

கலை நயம் கைவரப்பெற்ற ஸ்தபதி

ஸ்தபதி அமரர் செல்லப்பா சிவரத்தினசிங்கத்தை முதலில் எமது மாணவர் சண்.கஜேந்திரன் மூலம் அறிமுகமானேன். அவர் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் முகிழ் நிலை ஆசிரியராகப் பயிற்சி பெற்ற வேளை அவரின் பாதுகாவலர் சிவரத்தினசிங்கம் அப்போது அவரைப் பாா்வையிட பிரதி ஞாயிறு தோறும் மாலை வேளைகளில் கல்லூரிக்கு வருகை தருவாா். ஒரு சமயம் அவா் தனது சித்தப்பாவெனக் கஜேந்திரன் அறிமுகப் படுத்தியிருந்தாா். மிக அமைதியுடன் மரியாதையாக, என்னுடன் உரையாடினாா். அவா் காட்டிய உயா் மரியாதையும், நிதானமும், அமைதியும் அவரைப் பூரணம் நிறைந்த ஒரு ஸ்தபதியாக அடையாளம் காட்டி நின்றது.

ஸ்தபதி எனப்படுபவா் தான் கண்ணால் கண்டவற்றை அல்லது புராண இதிகாசங்களில் கூறப்பட்ட சம்பவங்களை அல்லது மெய்ப்பொருள்களை தனது மனக்கண்ணில் நிறுத்தி உருங்களை வடிவமைத்து சிற்பங்களாக உருவாக்கி கொள்வா். அவ்வாறு படைக்கும் போது அமைதியும் பொறுமையும் மற்றும் நிதானமும் மிக அவசியம்.இவை அனைத்தையும் அமரா் செல்லப்பா சிவரத்தினசிங்கம் ஸ்தபதி – யிடம் அன்று கண்டேன்.அவா் வழிகாட்டலில் கஜேந்திரனின் பாண்டிய மன்னா்களின் சின்னமான மீன் வடிவத்தைச் சிற்பமாகச் செதுக்கிக் கல்லூரியில் காட்சிப் படுத்திய போது வழிகாட்டியின் திறமையை அறிந்து மகிழ்ந்தேன். அவ்வளவு தத்ரூபமாக அது அமைந்திருந்தது.இதுபோன்று இவாா்களால் கல்லூரியில் ஒரு வரவேற்பு மங்கையும் மரத்தினே செதுக்கப்பட்டு அழகுற காட்சிப் படுத்தப் பட்டமையும் பலராலும் பெரிதும் கவாந்துள்ளது.

"தமிழா் சிற்பக்கலைப் போக்கில் உருவாக்கம் பெறும் சிற்பங்கள் வெறும் அழகிய காட்சிப் பொருட்களாக மட்டும் இல்லாமல், காட்சிக்கும் அப்பால் சென்று கருத்துக்களையும் உணா்ச்சிகளையும் ஊட்டுவன என்ற மயிலை. சீனி. வெங்கடசாமியின் கருத்துக்களைவாக ஸ்தபதி செல்லப்பா சிவரத்தினத்தின் சிற்பங்கள் உயிருள்ளவைகளாக அமைந்து சிற்பிதி தலமைய இங்கு பதிவு செய்து கொள்வதில் பெருமை கொள்கின்றோம்..

திருநாவுக்கரசு கமலநாதன்

கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை பத்தே சிற்பத் தொழிலுக் குறுப் பாவன.

என்று நிகண்டு எடுத்துரைக்கின்றது. அவற்றில் மரத்தில் உயிா் வடிவம் கண்டு தமிழா் சிற்பக்கலை வடிவமேம்பாட்டுக்கு அமைதியாகத் தனது பங்களிப்பை ஆழமாகச் செலுத்திஇருந்தாா். சிற்பங்கள் பெரும்பாலும் மதவழிபாடுகளுடன் தொடா்பு கொண்டவை. சிறப்பாக சைவ சமயத்துடன் நெருங்கிய தொடா்பு கொண்டுள்ளமை யாவரும் அறிந்ததே.கோயில் கோபுரங்களில் பல்வேறு சிற்பங்கள் அமைக்கப்படும்.இறைவன் வீதியுலா வரும்போது பயன்படும் வாகனங்கள் விலங்குகள், பறவைகள் வடிவில் மரத்தினால் அமைந்திருக்கும். அத்துடன்கோயில் திருவிழாக்களில் பயன்படும் தேரும் மரத்தினாலேயே ஆக்கப்படும்.மரத்தில் உருவாகும் சிற்பங்கள் யாவும் செதுக்கல் தொழிற்பாட்டுடன் தொடா்புடையவை. இயற்றை எல்லாம் அழகுற அமைத்துக் கொள்வதில் அமரா் சிவரத்தினசிங்கம் வல்லவா். அவரது கைவண்ணத்தில் உருவான வாகனங்கள் பல இலங்கையின் பல கோயில்களிலும் வெளிநாட்டுக் கோயில்களிலும் பயன் பாட்டில் உள்ளன.*

இந்தக் உயா்ந்த கலைஞரின் இறப்பு எமக்கு மட்டுமல்ல தமிழா் சிற்பக் கலை உலகுக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப் பாகும்.

அவரது பிரிவால் வாடும் அவரது உறவினா்களுக்கும் ஏனைய கலைஞா்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவா் ஆத்மா கலைஞானன் பாதங்களில் அமைதி கொள்ள எல்லாம் வல்ல நல்லூா் முருகப் பெருமானைப் பிராா்த்தித்து அமைகின்றேன்.

வாழ்வு மொழி

உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன் செல்கிறாயோ, அப்பொழுது நவரான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

–விவேகானந்தா்

ஐ.நா.வின்...

(தொடர்ச்சி)

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் ஐ.நா.விடம் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை வந்துள்ள ஐ.நா.வின் மத்திய கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்களுக்கான திணைக்களத்தின் உதவிப் பொதுச் செயலாளர் காலித் கியாரி நேற்று மாலை தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்து பேசியிருந்தார். கொழும்பில் உள்ள ஐ.நா. வதிவிட அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இராசம்பந்தன் , தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா எம்.பி.க்களான சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராசம்பந்தன் அரசாங்கமானது ஒநோடு ஒரே சட்டம் என்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்துள்ளது. இதன் மூலம் அதிகாரப் பகிர்வினை மழுங்கடிப்பதே நோக்கமாக உள்ளது.

புதிய அரசியல் அமைப்புக்கான நடவடிக்கையும் சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. சிங்க பௌத்த தேசிய வாதத்தை பலப்படுத்தும் வகையிலேயே இதனை அரசாங்கம் மேற்கொள்ளும் என்ற சந்தேகம் எம்மிடம் உள்ளது. அரசாங்கமானது தமிழர்களின் குடிப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சித்து வருகின்றது. காணி அபகரிப்பு தொடர்கின்றது. தொல்பொருள் திணைக்களம் ,மகாவலி திட்டம் ,வனவளப் பாதுகாப்பு என்ற காரணங்களைக்காட்டி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் பிரேரணைகள் கொண்டுவரப்படும்போது தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்பை கொண்டிருக்கின்றனர். ஆனால் இறுதியில் ஏமாற்றமே அவர்களுக்கு மிஞ்சுகின்றது. எனவே இந்த விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பில் தாம் கவனம் செலுத்துவதாக ஐ.நா.வின் உதவி பொதுச்செயலாளர் உறுதி வழங்கியுள்ளார்.

புதிய...

(தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், கொவிட் நிலையில் அரசாங்கம் மக்களை பாதுகாக்க செயற்பட்டது. மக்களை பாதுகாக்கத் தேவையான சகல நடவடிக்கைளையும் சரியான நேரத்தில் செய்துள்ளோம். இவற்றை முகாமைத்துவம் செய்ய பிரதமர் அலுவலகம் பணியாற்றியது.

பிரதமர் அலுவலகம் கொரோனா தொற்று நிலையில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டது. ஆறாம்பத்தில் அத்தியாவசிய சேவைகளுக்காக அரசாங்கம் செயலணி ஒன்றை நியமித்தது. இந்த ஜனாதிபதி செயலணி எமது மேற்பார்வையின் கீழ் செயற்பட்டது. மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவும் பிரதமர் அலுவலகம் பணியாற்றியது. அதே போன்று கட்சித் தலைவர்களுடன் கருத்துப் பரிமாறினோம். மக்களின் அத்தியாவசிய சேவைகளையும் சுகாதார வசதிகளையும் வழங்க சகல நிலைகளிலும் பணியாற்றினோம். மருத்துவர், பாதுகாப்புப்படையினர் தமது பொறுப்பை நிறைவேற்றினர். கொவிட்டினால் வர்த்தகங்கள் பாதிக்கப்பட்டன. கொவிட்டிலிருந்து பாதிக்கப்பட்ட நாட்டை மீட்க பங்காற்றி வருகிறோம். அதற்கமைய நிதி அமைச்சர் குறுங்கால மற்றும் மத்திய கால திட்டங்களை உள்ளடக்கிய பட்ஜட்டை முன்வைத்துள்ளார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும்.

2019இல் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தையே ஏற்றோம். இந்தப் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான திட்டங்கள் இம்முறை வரவு–செலவுத்திட்டத்தில் உள்ளன. தமது அரசியல் நலனுக்காக விவாதித்துக் கொள்வதை காண்கிறோம். எதிரணி முன்வைக்கும் நியாயமான கருத்துக்களை செவிசாய்க்க தயாராக இருக்கிறோம். கூட்டுப்பொறுப்புடன் நாட்டின் எதிர்காலத்திற்காக முடிவுகளை எடுக்க வேண்டும். மக்களுக்காக பொறுப்புடன் பணியாற்ற சகல எம்.பி.க்களும் முன்வர வேண்டும்.

2022இல் புதிய வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்க பதிவுக் கட்டணம் எதுவும் அறவிடப் படமாட்டாது. புதிய வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்க முன்வருமாறு இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பு விடுக்கிறோம். அந்நியச் செலாவணியை கொண்டுவரவும் பங்களிக்குமாறு கோருகிறேன். மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். 25 வருடங்கள் நீடித்த அதிபர் ஆசிரியர் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நெருக்கடி நிலையிலும் இம்முறை வரவு–செலவுத்திட்டத்தில் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிரணி விமர்சனங்களை செவிசாய்த்தோம்.அவற்றில் சில நியாயமானவை. நியாயமானவற்றை ஏற்று திருத்த நாம் தயாராக இருக்கிறோம். அரசியலமைப்பிற்கு நகல் சட்டம் தயாரிக்கப்படுகிறது.அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஆராய்வோம். நாம் எதனையும் ரகசியமாக மறைத்து செய்யமாட்டோம் என்றார்.

உயிர்த்த...

(தொடர்ச்சி)

விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர இதனை நீதிமன்றுக்கு தெரிவித்தார்.

இந்நிலையில் பிரதான பிரதிவாதியாக அரச தரப்பால் அறிமுகப்படுத்தப்படும் அபூ செய்த் எனப்படும் மொஹம்மட் இப்ராஹீம் மொஹம்மட் நௌபர் அல்லது நௌபர் மௌலவி உட்பட 25 பேருக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 2022 ஜனவரி 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணை ஆரம்பம்

இந்த குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விவகாரத்தை விசாரிக்கவென நியமிக்கப்பட்டுள்ள, கொழும்பு மேல் நீதிமன்றின் தலைமை நீதிபதி தமித் தொடவத்த தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளான அமல் ரணராஜ மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகியோர் அடங்கிய சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்ற குழாம் முன்னிலையிலேயே இந்த வழக்கு நேற்று (23) 2 ஆவது தடவையாக முற்பகல் 10.40 மணியளவில் இவ்வாறு விசாரணைக்கு வந்தது.

பாதுகாப்பு பலப்படுத்தல்:

கொழும்பு மேல் நீதிமன்றின் முதலாம் இலக்க விசாரணை அறையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில், நீதிமன்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. மேல் நீதிமன்ற விசாரணை அறைக்குள் நுழையும் அத்தனை பேரும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். பொலிஸாரும் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டிருந்த நிலையில், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

25 பேர் மன்றில் ஆஜர்

இந்த விவகாரத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 25 பிரதிவாதிகளும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். மெகலின், அங்குணகொலபெலஸ்ஸ, மஹர, நீர்கொழும்பு உள்ளிட்ட பல சிறைச்சாலைகளில் இருந்து அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

15 ஆவது பிரதிவாதிக்கு குற்றப் பத்திரிகை கையளிப்பு

கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி 24 பிரதிவாதிகளுக்கு மன்றில் குற்றப் பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன. 23 270 குற்றச்சாட்டுக்கள் அதில் அடங்கியிருந்த நிலையில், நேற்றைய தினம் கடந்த தவணையின் போது கொவிட் தொற்று காரணமாக மன்றில் ஆஜர் செய்யப்படாத 15 ஆவது பிரதிவாதிக்கு குற்றப் பதிவுப் பத்திரிகை கையளிக்கப்பட்டது. நேற்றைய தினம் மன்றில் இவ்வழக்குவிசாரணைகள்ஆரம்பமான போது,தலைமை நீதிபதி தமித் தொடவத்த, பிரதிவாதிகளுக்கான சட்டத்தரணிகள் பிரசன்னம் தொடர்பில் அவதானம் செலுத்தினார். இதன்போது 25 பேரில் 10 பேருக்கு சட்டத்தரணிகளின் பிரசன்னம் இருக்கவில்லை.

நேற்றைய தினம் மன்றில்,7,12,17,18,19,20,21 ஆம் பிரதிவாதிகளுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம். சஹீட் ஆஜரானார். 9ஆம் பிரதிவாதிக்காக சிரேஷ்ட சட்டத்தரணி கல்லாலி ஹுசைனும், 11ஆவது பிரதிவாதிக்காக அரசினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி கசன் லியனகேயும் ஆஜராகினர். 13ஆவது பிரதிவாதிக்காக சட்டத்தரணி ஜி.கே.கருணாசேகரவும், 16ஆவது பிரதிவாதிக்காக சட்டத்தரணி டயஸும், 22,23,24 ஆம் பிரதிவாதிகளுக்காக சட்டத்தரணி விஜித் தாநந்த மடவலகமவும், 25ஆவது பிரதிவாதிக்காக சட்டத்தரணி கருங்க பெரேராவும் ஆஜராகினர்.

மன்றில் ஆஜரான சட்டமா அதிபர் தரப்பு

நேற்றைய தினம் இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி ஹரிப்பிரியா ஜயசுந்தரவின் தலைமையில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா உள்ளிட்ட 7 பேர் கொண்டமுழுவினர் ஆஜராகினர். பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் இருவரைக் கொண்ட குழாம் பிரசன்னமாவதாக அறிவிக்கப்பட்டது.

நௌபர் மௌலவிக்கு சட்டத்தரணிகள் இல்லை

பிரதான பிரதிவாதியாக அடையாளப்படுத்தப்பட்ட நௌபர் மௌலவி, தேசிய தௌஹீத் ஜமா அத்தின் ஆயுதப் பிரிவை வழி நடாத்தியதாக கூறப்பட்ட மில்ஹான் உள்ளிட்ட 10 பேர் சார்பில் சட்டத்தரணிகள் பிரசன்னமாகியிருக்கவில்லை. சட்டத்தரணிகள் ஆஜராகாத பிரதிவாதிகள் அனைவருக்கும் அரசின் செலவில் சட்டத்தரணிகளை நியமிப்பது தொடர்பில் விரும்பமா எனவும் இல்லையேல் கட்டணம் செலுத்தி சட்டத்தரணிகளை நியமிக்க சந்தர்ப்பம் வேண்டுமா எனவும் தலைமை நீதிபதி தமித் தொடவத்த நீதிமன்ற உரை பெயர்ப்பாளரின் ஊடாக பிரதிவாதிகளிடம் கடந்த தவணையின் போது (ஒக்டோபர் 4)வினவியிருந்தார். இதன்போது பிரதிவாதிகள் ஒவ்வொருவாக, தமக்கு தமிழ் தெரிந்த சட்டத்தரணி ஒருவரை அரசாங்க செலவில் நியமிக்குமாறு கோரியிருந்தனர்.

இதனையடுத்து, பிரதிவாதிகள்சார்பில் ஆஜராவதற்காக தமிழ் தெரிந்த சட்டத்தரணிகளின் பட்டியலொன்றினை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸுக்கு, நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி அறிவித்திருந்தது. நேற்று அச்சங்கம் சார்பில் மன்றில் ஆஜராகிய சட்டத்தரணி ஒருவர், குறித்த பட்டியலை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் வேண்டும் என கோரினார். அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

அடுத்த தவணையின் போது குறித்த பட்டியலை சமர்ப்பிக்க அறிவித்த நீதிமன்றம், குறைந்த பட்சம் 3 பேருக்கு ஒரு சட்டத்தரணியை நியமிக்கும் வண்ணமேனும் பட்டியலொன்றினை முன்வைக்குமாறு ஆலோசனை வழங்கியது.

குற்றப் பத்திரிகை மொழி பெயர்ப்பு

முழுமையாக சிங்கள மொழியில் இருந்த குற்றப் பத்திரிகை தொடர்பிலும் தலைமை நீதிபதி கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி பிரதிவாதிகளிடம் வினவியிருந்தார். அதன்போது, 7 பிரதிவாதிகளைத் தவிர ஏனைய 17 பிரதிவாதிகளில் 16 பேர் தமக்கு குற்றப் பத்திரிகை தமிழில் வேண்டும் எனவும் 25 ஆவது பிரதிவாதியான மொஹம்மட் அக்ரம் அஹம்கம் தமக்கு அங்கில மொழியில் குற்றப் பத்திரிகை வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

இதனையடுத்து பிரதிவாதிகள் கோரும் குற்றப் பத்திரிகையின் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சட்டமா அதிபர் தரப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. எனினும் நேற்று அந்த மொழி பெயர்ப்புகள் வழங்கப்படவில்லை.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா கோரிய கால அவகாசம்

இதுதொடர்பில் நேற்று மன்றுக்கு தெளிவுபடுத்திய, வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர, மொழி பெயர்ப்பு வேலைகள் இடம்பெறும் நிலையில் அடுத்த தவணையில் அவற்றை வழங்க முயற்சிப்பதாக குறிப்பிட்டார்.

படகுப்பாதை...

(தொடர்ச்சி)

இது சட்டவிரோதமான செயற்பாடு மட்டுமல்ல, நாட்டின் சட்டத்திற்கு அமைய இது கொலை. ஆகவே இந்த மரணங்களை நாம் கொலையாகவே கருதுகின்றோம். இதனுடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்போம் என ஆளுந்தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை, ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர். இது குறித்தும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த அசம்பாவிதத்தையும் எமது தலையில் சுமத்தவே இவர்கள் முயற்சிக்கின்றனர். இந்த பாலத்திற்கு அடிக்கல் நாட்டியது நல்லாட்சியாகும். மதிப்பீடு செய்யாது, கேள்விமனுக்கோரல் விடாது அடிக்கல் நாட்டினர்.

நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் மதிப்பீடு செய்து, கேள்விமனுக்கோரலுக்கு விடப்பட்டு பாலத்தில் ஒரு பகுதியை புனரமைக்கவும் மக்களின் பாவனைக்கு விட வெகு விரைவில் திருத்த நடவடிக்கை எடுத்தோம். ஜூலை மாதம் இது குறித்து இம்ரான் மஹரூப் எம்.பி கேள்வியும் எழுப்பியிருந்தார்.

அதுமட்டுமல்ல. பாலம் திருத்த பணிகள் காரணமாக மாற்று வீதியும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் மாற்று வீதி 3 கிலோமீற்றர் தூரம். ஆகவே மக்கள் அந்த மாற்றுப்பாதையை பாவிக்க விரும்பவில்லை. அதேபோல் படகு சேவையும் மாநகர சபை மூலமாகவே இயங்கியுள்ளது. கிண்ணியா நகர சபையில் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தி அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் ஆட்சி அமைத்துள்ளது. அவர்கள் தான் படகு சேவைக்கும் அனுமதி வழங்கியுள்ளனர். ஆகவே எம்மீது குற்றம் சுமத்த வேண்டாம்.

படகு சேவையில் சிறுவர்களை அழைத்து செல்லும் வேளையில் உயிர் பாதுகாப்பு கவசங்களை பயன்படுத்தவில்லை, இது சட்டவிரோதமான செயற்பாடு, ஆகவே நாட்டின் சட்டத்திற்கு அமைய இது கொலை, இதனை அரசியல் பக்கம் திருப்ப வேண்டாம்.

நடன ஆராய்ச்சிக்கான CID சர்வதேச மாநாடு

12 நவம்பர் 2021
நேரம் : 8:41 EST

நடன ஆராய்ச்சிக்கான 7ஆவது வருட சர்வதேச மாநாடு கடந்த 2021 நவம்பர் 10 முதல் 14 வரை அமெரிக்காவின் மியாமி ஃபுளோரிடா நகரில் ஹாலண்டேல் கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது. இது ஹாலண்டேல் பிரிவு CID UNESCO Inc, யுனெஸ்கோவில் உள்ள CID UNESCO Parisஇன் நிர்வாக செயலகத்துடன் இணைந்து CLUB TROPICAL BALLROOM ஃபுளோரிடாவில் வழங்கப்பட்டது. CID அனைத்து தரப்பிலான நடனங்களையும் சமமாக நடத்திவருகிறது.

இது வெறுமனே நடனத்தின் ஒரு குறிப்பிட்ட பார்வைத் தன்மையை மட்டும் ஊக்குவிக்காது உலகளாவிய தன்மையை கொண்ட ஒரு கலை வடிவமாகவும் கல்விக்கான வழிமுறையாக மற்றும் ஆராய்ச்சிப் பொருளாகவும் நடனத்தை அங்கீகரிக்கிறது.

இது ஹாலண்டேல் நகரின் நகராட்சி, Broward County Division of Cultural Affairs, தேசிய யுனெஸ்கோ ஆணையம் மற்றும் கவுண்டி கமிஷனர்கள் வாரியத்தின் அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அறிவியல் நடன ஆய்வுக் கட்டுரைகள், விரிவுரைகள், பட்டறைகள், கண்காட்சிகள் மற்றும் நேரடி நடன நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்கும். தனித்துவமான இந்நிகழ்வு நடனக் கலையில் தங்கள் படைப்புகளை வெளிகாட்ட ஆர்வமுள்ள நிபுணர்கள் அனைவருக்காகவும் உருவாக்கப்பட்டதாகும்.

உலகெங்கிலுமுள்ள நடனக் கலைஞர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று, தனிப்பாடலாகவோ, இருவராகவோ அல்லது நடன குழுக்களாகவோ தங்கள் நடனங்களைக் காட்சிப்படுத்தினர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் 3-10 (நிமிடங்கள்) வரை நீடித்தது.

நவம்பர் 12, 2021 அன்று இரவு 8:41 PM EST மணிக்கு அமெரிக்காவின் மியாமி ஃபுளோரிடா நகரில் ஹாலண்டேலில் நடைபெற்ற 7வது ஆண்டு சர்வதேச மாநாட்டில் மைத்ரேயி சாய்பாபா (CID - 31754) ஒரு தனி பரதநாட்டியத்தை நிகழ்த்தினார். இந்திய பாரம்பரிய நடன வடிவமான பரதநாட்டியம் இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் பாரம்பரிய நடன வடிவமாக திகழ்கிறது. சமஸ்கிருத இந்து பண்டைய நூலான 'நாட்ய சாஸ்திரத்தில்' இக் கலைநிகழ்ச்சி பற்றிய கோட்பாடு அடங்கியுள்ளது.

அமெரிக்காவின் மியாமி
ஃபுளோரிடா நகரில் ஹாலண்டேலில் நடைபெற்ற
7வது ஆண்டு சர்வதேச மாநாட்டில்
மைத்ரேயி சாய்பாபா
(CID - 31754)

இந்நடன வடிவமானது இந்து மதக் கருப்பொருள்கள் மற்றும் நடனக் கலைகளின் ஆன்மீகக் கருத்துகளின் நிகழ்வுகளை காலடி அவைவுகளாலும் பார்வையை ஈர்க்கக்கூடிய சைகைகளாலும் சிறந்த முறையில் விளக்குகிறது. இந்தியா. நாமக்கல் Kalpataru School of Fine Arts CID - (31748)இன் கீழ் இந்தியாவின் பெயரை அவர் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

பாரம்பரிய நடனமான பரதநாட்டியத்தின் கலாச்சார மற்றும் பாரம்பரிய விழுமியங்களை கற்பிப்பதன் நோக்கத்துடன் டாக்டர் ராதிகா பாலகிருஷ்ணனால் இந்தியாவின் நாமக்கல் Kalpataru School of Fine Arts கல்லூரி 2009இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாடு, இந்தியா மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு மத விழாக்களில் நடனமாடி பல விருதுகளை வென்றுள்ளனர்.

தற்போது மைத்ரேயி சாய்பாபா Kalpataru School of Fine Arts பள்ளியில் ஐந்தாம் வருடத்தில் பயின்று வருகிறார்.அனுபவம் வாய்ந்த பரதநாட்டிய நடனக் கலைஞரான டாக்டர் ராதிகா பாலகிருஷ்ணனின் வழிகாட்டுதலின் கீழ் தாமோரு மாணவியாய் இருப்பதை அவர் தன்னுடைய பாக்கியமாக உணர்கிறார். அவர் தன்னுடைய 7ஆவது வயதிலிருந்து பரதநாட்டியம் பயின்று வருகிறார். மைத்ரேயி சாய்பாபா, இந்தியாவின் சென்னை, Kalakshetra Foundation இன் முன்னாள் மாணவி ஆவார். அதே நிறுவனத்தில் பரதநாட்டியத்தில் டிப்ளோமா பட்டமும் இவர் பெற்றுள்ளார்.

அவர் இந்தியாவின் சென்னையில் உள்ள Rukmani Devi College of Fine Arts' கல்லூரியில் நடன நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

அவர் GMOCO (Gujarati Mandal of Central Ohio) மற்றும் CTS (Columbus Tamil Sangam) ஆகியவற்றிலும் நடன நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த நடனத்தில், 'பரதநாட்டியம் உடலுக்கும் மனதுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடியது' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக பல்வேறு யோகா நிலைகளை நாட்டியத்தில் இணைத்துள்ளார்.

பாபநாசம் சிவன் எழுதிய கமாஸ் ராகத்தில் அமைந்த 'இடது பாதம் தூக்கியாடும்' பாடலுக்கு டாக்டர் ராதிகா, பரதநாட்டியத்தின் கர்ணங்கள் எனப்படும் பல்வேறு யோகாசனங்களைப் பயன்படுத்தி நடன அமைப்பு செய்துள்ளார். சிவனின் பாதமாக மைத்ரேயி சாய்பாபா நடனமாடினார். நடராஜப் பெருமானின் கருணை அனைத்து உயிர்களின் மீதும் பொழியட்டும் என்று கவிஞர் போற்றுகிறார். மறுபிறப்பிலிருந்து இரட்சிப்பைப் பெற மனிதனை இறைவன் முன் தலைவணங்குமாறு அவர் வலியுறுத்துகிறார். பூமியின் முக்கிய புள்ளியாகக் கருப்பட்டும் இந்தியாவின் சிதம்பரத்தில் சிவபெருமான் தனது மனைவி சிவகாமியுடன் நடனமாடுவதை கவிஞர் காட்சிப்படுத்துகிறார்.

மைத்ரேயி சாய்பாபா இந் நடனத்தை கர்ணங்கள் மற்றும் ஆசனங்கள் என்று அழைக்கப்படும் சில யோகா நிலைகளுடன் நிகழ்த்தினார்.இந்த நிலைகள் உடலை திருப்பவும் அதன் மூலம் ஒருவரை சுறுசுறுப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது. முதலில். அவர் நேரே நின்று. சமநிலைப்படுத்துதல் மற்றும் முதுகு வளைக்கும் நிலையோடு நடராஜாசனம் செய்தார். இந்த ஆசனம் கால்கள் மற்றும் கணுக்கால் தசைகளை வலுப்படுத்துகிறது மற்றும் தோள்பட்டை. தொடை மற்றும் வயிறு ஆகியவற்றை நீட்சியுற செய்கிறது. பின்னர் அவர் வீரபத்ராசனம் செய்தார். கையுடன் நின்று சமநிலைப்படுத்தினாள். இந்த நிலை முதுகு தசைகள் மற்றும் தொடை எலும்புகளை பலப்படுத்துகிறது மற்றும் சமநிலையை மேம்படுத்த உதவுகிறது. அடுத்து சன்னதம், ஜனிதம், புஜகத்ரசிதம். அலதகம் போன்ற பிற கர்ணங்களையும் செய்தார். இவ் அனைத்து நிலைகளும் நரம்புத்தசை ஒருங்கிணைப்பு மற்றும் சமநிலை மற்றும் சகிப்புத்தன்மையை மேம்படுத்துகின்றன.

மைத்ரேயி சாய்பாபா, அபிநய (roughly mime) மற்றும் ஹஸ்தா முத்திரைகள் (கை சைகைகள்) ஆகியவற்றின் சிக்கல் தன்மையை அறிமுகப்படுத்தினார் மற்றும் அவரது நிகழ்வில் நடனம் மற்றும் நடிப்பையும் இணைத்துக்கொண்டார். இந்திய பாரம்பரிய நடன வடிவங்களில் வியாபித்திருக்கும் மனோதத்துவ கருத்துக்களை அவர் அறிமுகப்படுத்தினார். இப்பாடல் ஒரு ஆழமான மனோதத்துவ அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், அவரது ஆடை ஒப்பனை, இசை இவை மூன்றும் ஆழமான அர்த்தத்தை எடுத்துகாட்டுகிறது. இது தல்லியும் மற்றும் விடாமுயற்சி மற்றும் தனித்துவமான இயக்கங்கள் நிறைந்த மிகவும் சுவாரஸ்யமான செயல்திறனாகும்.

மேலும் அவர் ஒரு சில கர்ணங்களுடன் நடனமாடினார். கர்ணங்கள் ஆசனங்கள் அல்லது யோக நிலைகளைத் தவிர வேறில்லை. அவர் அனைத்து கர்ணங்களையும் அல்லது யோக நிலைகளையும் ஆடம்பரமாக செய்தார். அவர் முழு மேடையையும் நிகழ்ச்சிக்காகப் பயன்படுத்தினார். ஒவ்வொரு இயக்கமும் சரியான நேரத்தில் இடம்பெற்றது. அவரது நிலைகள் விறைப்பாக இல்லை, அன்னம் போல அழகாக நகர்ந்தார். அவருடைய நேரம் குறைபாடற்றது மற்றும் அவருடைய தாள இயக்கம் துல்லியமாக இருந்தது.

மொத்தத்தில். மைத்ரேயி சாய்பாபாவின் நாட்டியமும் நடிப்பும் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

உயிர்களை காவுகொண்ட படகுப்பாதை விபத்து

மனித உயிர்களைக் காவுகொண்ட குறிஞ்சாக்கேணி படகுப் பாதை விபத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றது. இதனால் கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பிரதேசம் சோகத்தில் மூழ்கியுள்ளது. பாடசாலைக்குச் சென்ற மாணவர்களும் அவர்களது உறவினர்களுமே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். பொறுப்பு வாய்ந்த உயர் அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட்டிருந்தால் இத்துயரச் சம்பவத்தை தடுத்திருக்கலாம் என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(திருமலை மேலதிக, சேனையூர் நிருபர்கள்)

கல்முனைப் பிராந்தியத்தில் தீவிரமடைகிறது கொரோனா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

(காரைதீவு நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் மீண்டும் கொரோனா தீவிரமடைந்து வருகிறது. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களும் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் 11 பேரும் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். மக்கள் சுகாதார வழிமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி அவதானமாக இருக்க வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குண. சுகுணன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த 3 தினங்களாக மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த 37 மாணவர்கள் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் அட்டாளைச்சேனை கொவிட் இடைநிலை முகாமில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் தற்போது பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பல இடங்களில் கொவிட் தொற்றாளர்கள் நாளாந்தம் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அதாவது 10 தொடக்கம் 20 நாம் தடுப்பு முறைகளை மேலும் வீதம் வரை கொவிட் தொற்று தீவிரமாக்க வேண்டிவரும் என்றார். அதிகரித்துள்ளது. இதனடிப்படையில் கல்முனைப் பிராந்தியத்தில் 3 தினங்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்களும் பொத்துவில் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 11 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கொவிட் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்கள் என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

எனவே, தடுப்பூசிகளைப் பெற்றுவிட்டோம் என்பதற்காக சுகாதாரவிதிமுறைகளை கடைப்பிடிக்க தவறவேண்டாம். அவதானமாக இருங்கள். தவறினால் கடந்த காலங்களைப்போல்



கிண்ணியா, குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படங்கள் இறக்காமம் மேலதிக நிருபர்)

வாழைச்சேனையில் துக்கம் அனுஷ்டிப்பு

(கல்குடா நிருபர்)

கிண்ணியா, குறிஞ்சாக்கேணியில் நேற்று இடம்பெற்ற இழுவைப்படகு விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வாழைச்சேனை வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பகுதியில் நேற்று (23) இழுவைப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து வாழைச்சேனை வர்த்தக சங்கத்தினால் வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டிருந்தது. இதற்கிணங்க வாழைச்சேனை வர்த்தக நிலையங்களில் வெள்ளைக்கொடிகள் தொங்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சாக்கேணி படகு விபத்து

விபத்துச் சம்பவங்கள் தொடர இடமளிக்கக்கூடாது

மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் துரைநாயகம்

(சேனையூர் நிருபர்)

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இனிமேலும் இடமளிக்கக்கூடாது என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்று (23) இடம்பெற்ற இழுவைப்படகு விபத்தில் மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.இச்சம்பவம் குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிண்ணியாவில் நேற்று (23) இடம்பெற்ற இழுவைப் படகு விபத்தில் பல கனவுகளுடன் பாடசாலைக்குச் சென்ற பல சிறார்கள் பரிதாபகரமாக காவு கொள்ளப் பட்டிருக்கின்றார்கள். இது மிகுந்த மன வேதனையைத் தருகின்றது. இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எனினும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அரசாங்கம் இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இன்னமும் இதுபோன்று பல பகுதிகளில் பாதுகாப்பற்ற இழுவைப்படகு மூலம் பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இழுவைப்படகு மூலம் பயணம் மேற்கொள்பவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இவர்களின் போக்குவரத்துக்கு நிரந்தரத்தீர்வை பெற்றுக்கொடுக்கும் முகமாக பாலங்களை அமைக்கும் நடவடிக்கையையும் அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்பதில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணீர் அஞ்சலி

அமரர் திரு. கருப்பையா பிள்ளை

A K P PAWN BROKERS
No. 8 Chapel Street,Nuwara Eliya. உரிமையாளர்

இந்தியா திருச்சிராபள்ளி மாவட்டம் மேல் வங்காரம் கிராமம் (லேட்) மாயாண்டி பிள்ளை அவர்களின் புதல்வனும் நுவரெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சித்தாஎலிய சீதையம்மன் ஆலய பரிபாலன சபையின் ஆயுட்கால உறுப்பினரும் இந்த நிர்வாக சபையின் உறுப்பினருமான க. நெடுமாறனின் தந்தையுமான திரு. கருப்பையா பிள்ளை அவர்கள் நேற்று 23.11.2021 செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் இன்று 24.11.2021 புதன்கிழமை மதியம் 2.00 மணியளவில் நிந்திச்சி 18 அண்ணாமலை நகர், இலக்கம் 9B. பாலாஜி அவென்யு, தாஜ்மஹாலால் காலையில் உள்ள அவர்களது இல்லத்திலிருந்து அன்னாரின் ஊர்வலம் புறப்பட்டு குடறூட்டி மின் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

நுவரெலியா ஸ்ரீவேலாயுத முத்துமாரியம்மன் ஆலய
சீத்தாஎலிய சீதையம்மன் ஆலய பரிபாலன சபையினர்.

2017இல் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கைகளுடன் தொடர்புடைய 94 இலங்கையர்களின் பெயர் பட்டியலை கையளித்தேன்

அரச தரப்பின் பிரதான சாட்சியாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன சாட்சியம்

(எம்.எப்.எம்.பஸீர்)

'சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பரப்புகள் வெளி நாட்டு படைகளிடம் வீழ்ச்சி கண்ட பின்னர், வெளிநாடுகளிலிருந்து அங்கு 'ஜிஹாத்' செய்வதற்காக என கூறிக் கொண்டு செல்வோரை, அங்கு வர வேண்டாம் என ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொதுவாக அறிவித்தனர்.

அதற்கு பதிலாக அவரவர் நாடுகளில் 'ஜிஹாத்' எனும் பெயரின் நடவடிக்கைகளை எடுக்க அவர்கள் உத்தரவிட்டிருந்தனர். இதனையடுத்து இலங்கையிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல் உணரப்பட்டது. இதனையடுத்து அது தொடர்பில் தீவிரமாக அவதானம் செலுத்தப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கைகளுடன் ஒன்றிப்போன 94 இலங்கையர்களின் பெயர் பட்டியலை அப்போதைய பாதுகாப்பு செயலரிடம் கையளித்தேன் என உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு வழக்குகளின் பிரதான சாட்சியாளராக முன்னாள் அரச உளவுச் சேவையின் பணிப்பாளரும் தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த ஜயவர்தன நேற்று சாட்சியமளித்தார்.

இந்த விவகாரத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க விஷேட ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்குகளானது கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்லே தலைமையிலான, மேல் நீதிமன்றின் ஆதிய பட்டபெதிகே மற்றும் மொஹம்மட் இல்ஸுதீன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று (23)முற்பகலும், பிற்பகலும் விசாரணைக்கு வந்தன.

இதன்போது முறைப்பாட்டாளரின் முதல் சாட்சியாளராக, பிரதி சொலிசிட்டர் ஜெனரல்களான திலீப பீரிஸ் மற்றும் சுதர்சன சில்வா ஆகியோரின் நெறிப்படுத்தலில் சாட்சியமளிக்கும் போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன இதனை தெரிவித்தார்.

பூஜித்துக்கு எதிரான வழக்கு

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிற்கு எதிரான வழக்கு முதலில் நேற்று (23)முற்பகல் விசாரணைக்கு வந்தது. இதன் போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸின் நெறிப்படுத்தலில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்தார். தான் 2015ஆம் ஆண்டு அரச உளவுச் சேவையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கொள்கைகளை பரப்புவோர் தொடர்பில் தீவிர அவதானத்தில் இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மாத்தளை, கலேவல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சிரியாவுக்கு சென்று பயங்கரவாதிகளுடன் சேர்ந்தமை தொடர்பிலான தகவல்களை வெளி நாட்டு உளவுச் சேவைகள் ஊடாக பெற்று வெளிப்படுத்திக்கொண்டேன். சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். கட்டுப்பாட்டிலிருந்த நிலப்பரப்புகள் வெளி நாட்டு படைகளிடம் வீழ்ச்சி கண்ட பின்னர், வெளிநாடுகளிலிருந்து அங்கு 'ஜிஹாத்' செய்வதற்காக என கூறிக்கொண்டு செல்வோரை, அங்கு வர வேண்டாம் என ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் பொதுவாக அறிவித்தனர். இதனால் சிரியாவுக்கு செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் பின்னரேயே ஐ.எஸ். ஐ.எஸ். கொள்கை இலங்கையில் தீவிரமடைந்தது.

மாவனெல்லை புத்தர் சிலை தகர்ப்பு நடவடிக்கைள், விஷமச் செயல்களாக சிலரால் காட்டப்பட எத்தனிக்கப்பட்ட போதும், அது சஹ்ரானின் உத்தரவுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட அடிப்படைவாதச் செயல் என நான் அப்போதைய பொலிஸ் மா அதிபருக்கும், சி.ஐ.டி.யின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் அறிவித்தேன்.

இஸ்லாமிய அடிப்படைவாத கொள்கையை பிரச்சாரம் செய்த சஹ்ரான் ஹஸிம் சமூகத்துக்குள் சுதந்திரமாக இருப்பது மிக ஆபத்தானது என கடந்த 2018ஆம் ஆண்டு மே மாதம் அறிவித்ததாகவும், அவரை விஷேட பொலிஸ் குழு ஊடாக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளை கோரினேன். அதுதொடர்பில் பாதுகாப்பு செயலர், பொலிஸ் மா அதிபர், பொலிஸ் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சர் உள்ளிட்ட பல தரப்புக்களையும் நான் தெளிவுபடுத்தியிருந்தேன்.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கைகளை பரப்புவோர் தொடர்பில் 340 இற்கும் அதிகமான அறிக்கைகளை பாதுகாப்பு செயலர், பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ளேன். அதில் 2017ஆம் ஆண்டு இந்நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கைகளை பரப்பும் 94 பேர் தொடர்பில் ஆராயமாறு நான் பாதுகாப்பு செயலரிடம் கோரினேன்.' என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸின் நெறிப்படுத்தலில் சாட்சியமளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிலந்த ஜயவர்தன குறிப்பிட்டார்.

ஹேமசிறியின் வழக்கு

பிற்பகல் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கின் சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் போதும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன முதல் சாட்சியாளராக, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வாவின் நெறிப்படுத்தலில் சாட்சியமளித்தார். இன்று (24) இரு வழக்குகளினதும் சாட்சி விசாரணைகள் 2 ஆவது நாளாகவும் தொடரவுள்ளது.

மாவீரர்களுக்கு

பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலி செலுத்த முன்வர வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்

(எம்.நியூட்டன்)

மாவீரர்களுக்கு பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலி செலுத்த முன்வர வேண்டும். குறித்த நேரத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாது நவம்பர் 27ஆம் நாளிலே மாவீர்களை நினைவு கூருவது நமது கடமையாவதுடன் இதற்கு அரசியல்வாதிகளும் அரசியல் பிரதிநிதிகளும் முன்னின்று செயற்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவீரர் நாளை அனுஷ்டிப்பது தொடர்பாக அரசாங்கம் பொலிஸார் மூலமும் படையினர் மூலமும் நீதிமன்றங்களை அணுகி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தச் குழலில் பின்னணியிலேயே தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவு கூர முற்படுகின்றார்கள் எனக் கூறி எங்கள் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தடை உத்தரவுகளை பெற்றிருக்கிறார்கள். சில நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை பிறப்பிக்க மறுப்பு தெரிவித்து இருக்கின்றன.

மாவீரர் நினைவு நினங்கள் இடம்பெறும் துயிலும் இல்லங்கள் தற்போது இராணுவ முற்றுகைக்குள் காணப்படுகின்றன. நீருவில் பொதுப் பூங்காவில் மாவீர்தின நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதியை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவரிடம் கேட்டிருக்கின்றோம். அந்த அனுமதி கிடைத்தவுடன் சுகாதாரத் துறையினரின் அனுமதியுடன் நவம்பர் 27ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றோம்.

குறிப்பாக அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் இதில் மௌனமாக இருக்காது துணிந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலியை செலுத்த முன்வர வேண்டும்.

குறித்த 6.05 மணி நேரத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாது நவம்பர் 27ஆம் திகதி மாவீரர்களை நினைவு கூருவது நமது கடமையாகும் என்றார்.

கொரோனா, டெங்கு ஒழிப்பு தொடர்பான செயலணி கூட்டம்

(எம்.நியூட்டன்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை சற்று குறைவடைந்த நிலையில் கடந்த வாரத்திலிருந்து அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மாவட்ட கொரோனா செயலணியானது நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கூடி ஆராய்ந்தது.

குறித்த செயலணி கூட்டத்தின்போது யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள நிலைமையில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன் மேலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக டெங்கு தொற்று நிலைமை மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்,யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், 51ஆவது பிரிவின் இராணுவத்தளபதி சந்தன விக்ரமசிங்க, யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள்,சுகாதார அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பனையிலிருந்து தவறிவீழ்ந்து சீவல் தொழிலாளி உயிரிழப்பு

(வடமராட்சி நிருபர்)

வடமராட்சி உடுப்பிட்டி – இமையாணனில் சீவல் தொழிலாளி ஒருவர் பனையிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சீவல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே பனையிலிருந்து தவறி வீழ்ந்தார் எனக் கூறப்படுகின்றது. உடுப்பிட்டி – இமையாணனை கிழக்கை சேர்ந்த ந.ஜெயராசா (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.வீழ்ந்தவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்து விட்டார் என அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மேலதிக அரசாங்க அதிபருக்கு கொரோனா தொற்று

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவர் நேற்று முன்தினம் முன்னெடுத்த அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடையவர்களையும் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாவீரர் நாள் நிகழ்வுக்கு

தடை கோரிய விண்ணப்பம் நீதிமன்றால் நிராகரிப்பு

(எம்.நியூட்டன்)

மாவீரர் நினைவேந்தலுக்கு தடை கோரி பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னிலையாகுமாறு தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி கிளை செயலாளர் கருணாகரன் நாவலன் , தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணி செயலாளர் கருணாகரன் குணானன் , ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் அம்பலம் கனகையா , ஊர்காவற்றுறை தொகுதி கிளையின் நிர்வாக கிளை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிற் (சின்னமணி), ரமேஷ் றமில்டன், குத்ரன் (நெடுந்தீவு) ஆகியோருக்கு பொலிஸாரினால் வழங்கப்பட்டிருந்த உத்தரவுக்கிணங்க நேற்று குறித்த தரப்பினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர் .

இவர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி நல்லையா சிறிகாந்தா வாதங்களை முன்வைத்ததை தொடர்ந்து குறித்த விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்து கட்டளை பிறப்பித்தார். மூத்த சட்டத்தரணி சிறிகாந்தாவுடன் சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோஷன், சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி ஷாலினி ஆகியோர் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல

துப்புரவு பணியில் ஈடுபட்டோருக்கு இடையூறு ஏற்படுத்திய இராணுவத்தினரும் பொலிஸாரும்

(எம்.நியூட்டன்)

யாழ்.கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக துப்புரவு பணியில் ஈடுபட்டோருக்குக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் இடித்தழித்து, பாரிய இராணுவ முகாமை அமைத்து, நிலை கொண்டுள்ளனர். அதனால் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமையாகும்.

தற்போது மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அக்காணியின் முன்பக்கமாக வீதியின் இருமருங்கினையும் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.அதன்போது , கோப்பாய் பொலிஸார் மற்றும் பெருமளவான இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டதுடன் சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் சிலர் தாமும் துப்புரவு பணியில் ஈடுபடுவதாக துப்புரவு பணியில் ஈடுபட்டு இருந்தவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டுள்ளனர்

இதனை தொடர்ந்து குழப்பங்கள் ஏற்படாதவண்ணம் துப்புரவு பணியை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து விலகிச்சென்றுள்ளனர்.

அக்கரப்பத்தனை தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(அட்டன் நிருபர்)

அக்கரப்பத்தனை பெருந்தோட்டத்துக்குட்பட்ட அல்பியன் தோட்டத்தைச் சேர்ந்த ஆட்லோ, பிரஸ்டன், சின்னநாகவத்தை, நியுபிரஸ்டன் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாமல் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சின்ன நாகவத்தை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், தேயிலை மலைகள் காடாகி கிடப்பதாகவும் கொழுந்து விளைச்சல் குறைவாக இருப்பதால் தற்போது தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்திற்கு 20 கிலோ கட்டாயமாக பறிக்க வேண்டுமெனவும் நல்ல கொழுந்து எடுத்து கொடுக்க வேண்டுமெனவும் அழுத்தம் கொடுத்து வருவதோடு குறைவாக கொடுத்தால் கிலோ கணக்கில் சம்பளம் தருவதாகவும் இதனால் தொழில் ரீதியாக பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தோட்ட அதிகாரி முறையாக தோட்டத்தை வழி நடத்தவில்லை என தெரிவித்தும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 9 மணி முதல் பகல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அதிகாரிகளும் அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களும் வருகை தந்து துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

உடனடியாக தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை வழங்குமாறும் மேதேயிலை மலைகளை துப்பரவு செய்யுமாறும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். பின்னர் தோட்ட அதிகாரிகள் இதனை ஏற்றுக்கொண்டதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தை இடை நிறுத்தி சென்றனர்.

ஆயினும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் பல சிரமங்களை எதிர்நோக்குவதால் கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் பேச்சுவார்த்தைகளை சும்மா நடத்தாமல் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். மேலும், தமக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் இதுவரை முறையாக கிடைக்கவில்லை என குறிப்பிட்டதுடன் குறிப்பிட்ட தோட்டங்களை நடத்த முடியாவிட்டால் தமக்கு வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

இது தொடர்பில் இ.தொ.கா.வின் ஏ.பி சக்திவேல் கூறுகையில் தொழிலாளர்களுக்கு உடனடியாக சலுகைகளை வழங்க வேண்டுமெனவும் வழங்காத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் தோட்ட துரைமார்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பின் நிற்கப்போவதில்லை என தெரிவித்தார்

அரசால் விதைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை நிலைபெற வேண்டும்

ஆசிரியர் விடுதலை முன்னணி வேண்டுகோள்

(கொத்மலை நிருபர்)

ஒற்றுமை, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு என்பவற்றுக்கு கிடைத்த வெற்றியே ஆசிரியர்களின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும். இந்நிலையில் அரசாங்கத்தால் விதைக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை நிலைபெற வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும் என்று ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ். நாதன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சமூகச் சுக்கரத்தில் ஆசிரியர்கள் மிகவும் முக்கியத்துவம் மிக்கவர்களாக விளங்குகின்றார்கள். ஆசிரியர்களைப் புறந்தள்ளும் எந்த ஒரு நாடோ சமூகமோ மேலெழும்ப முடியாது. அந்த வகையில் இலங்கையில் ஆசிரியர்கள் நிலை எவ்வாறுள்ளது? என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. ஆசிரியர்கள் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வீதியில் இறங்கி போராட வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். ஆசிரியர்கள் தமது சம்பள உயர்வு உரிமைகளுக்காக கடந்த நூறு நாட்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டத்துக்கு இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது ஆசிரியர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு இணக்கமான பதிலை அரசாங்கம் வழங்கியது. அப்போது நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. விதைக்கப்பட்டிருக்கும் அந்த நம்பிக்கை நிலைபெற வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

இதேவேளை ஆசிரியர் போராட்டத்தின் போது உயிரிழந்த ஆசிரியைக்கு ஆசிரியர் விடுதலை முன்னணி மீண்டும் ஆழ்ந்த இரங்கலையும் வீர வணக்கத்தையும் பதிவுசெய்கிறது என்றார்.

உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு

(இறக்குவானை நிருபர்)

கண்டி திருத்துவ கல்லூரி மற்றும் ஹில்ஹட் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் கடுண்ணாவ பகுதியில் மண் சரிவில் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் 50 பேருக்கும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 120 குடும்பங்களுக்கும் உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கண்டி திருத்துவ கல்லூரி மற்றும் ஹில்ஹட் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர்களும் கலந்து கொண்டனர்.

பாதை அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

பெருந்தோட்டப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் பாதை அபிவிருத்தி குறித்து பாதைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஷாவிற்கும் செந்தில் தொண்டமானுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இ.தொ.கா.வின் உப தலைவரும், பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானின் பதுளையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்டப் பகுதிகளில் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நிட்டங்கள் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்களுடன் இணைந்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

"வெந்து தணியாத பூமி" நூல் வெளியீட்டு விழா

ஊடகவியலாளர் வரதன் கிருஸ்ணா எழுதிய மலையக தியாகிகளின் வரலாறு அடங்கிய "வெந்து தணியாத பூமி" நூல் வெளியீட்டு விழா அட்டன் ஸ்ரீ கிருஸ்ணபவான் கலாசார மண்டபத்தில் மலையகக் கலை பண்பாட்டு மன்றத்தின் செயலாளர் ஜீவன் இராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சோ.ஸ்ரீதரன் நூலை வெளியிட்டு வைப்பதையும், மலையகத்தின் ஆளுமைகளான கல்வி, மற்றும் கலைத்துறைகளில் பங்களிப்புச் செய்த ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் எம்.நாகலிங்கம், முதுபெரும் தொழிற்சங்கவாதியும் எழுத்தாளருமான டீ. அய்யாதுரை ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பானா. தங்கம்)

கிருமிநாசினிகள்...

(தொடர்ச்சி)

எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை விவசாயத்துறை அமைச்சரினால் கிருமிநாசினிகள் பதிவாளர் பதவியில் இருந்து தன்னை நீக்க முடியாது என கலாநிதி ஜே.ஏ. சுமித் குறிப்பிட்டுள்ளார். 2014ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கான உரிய சட்ட அனுமதியை பெற்றே புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதனால் அமைச்சரால் தன்னை பதவியில் இருந்து நீக்கவோ ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கவோ முடியாது எனவும் பதிவாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மேலும் க்ளைபோசெட் உள்ளிட்ட ஐந்து வகையான கிருமி நாசினிகள் பயன்பாடு மற்றும் விற்பனையை தடை செய்யும் வகையில் 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டின்33ஆம் இலக்க பீடைக்கொல்லிகள் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 11ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய கிருமிநாசினிகள் பதிவாளரினால் இந்த வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

பொது மக்களின் நன்மை கருதி கிருமிநாசினிகள் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய தடை நீக்கம் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது என வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், மொனராகலை மற்றும் பதுளை மாவட்டங்களில் மஹியங்கனை, ரிதிமாலியத்த, கந்தகெட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் க்ளைபோசேட் உள்ளிட்ட 5 வகையான கிருமி நாசினிகளை பயன்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை தடைசெய்யப்பட்டு அதற்கான வர்த்தமானி 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

தடைசெய்யப்பட்ட...

(தொடர்ச்சி)

ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவின் இரண்டு ஆண்டுகால ஆட்சியில் தேசிய நீதியில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலான சவால்களையும் சமாளித்து நாட்டை நிருவகிக்க நேர்ந்துள்ள நிலையில், பாரிய அளவிலான வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுடனும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக் ஷவுடனும் இதற்கு முன்னரான காலகட்டத்தில் இருந்து நெருக்கமாக நான் செயற்பட்டுள்ளேன். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர இந்த இருவரும் எவ்வாறு செயற்பட்டனர் என்பதை நான் நேரடியாக பார்த்த நபர். இவர்கள் இருவரும் இல்லையென்றால் இன்று யுத்தம் முடிவுக்கு வந்திருக்காது.

இன்று கொவிட் குறித்து பேசுகின்றோம். அன்று விடுதலைப் புலிகளை அழிக்காது, பிரபாகரனை அழிக்காது விட்டுவைத்திருந்தால் இன்று நாடு இரண்டாக பிளவுபட்டிருக்கும். அதற்கு இடமளிக்காது தடுத்து நிறுத்திய தலைமைத்துவம் அவர்களை சார்ந்தது. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றும் வேளையில் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் அமைப்புகளுக்கு தான் அழைப்பு விடுப்பதாக கூறினார். தன்னுடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு கூறினார். இதன்போது தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளை சந்திக்க மாட்டேன், அங்கீகரிக்கப்பட்ட புலம்பெயர் அமைப்புகளை மட்டுமே நான் சந்திப்பேன் என எதுவும் கூறவில்லை. ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்புகளுடன் பேசுவதற்கு தயார் என்பதையே அவர் கூறினார்.

தமிழ் புலம்பெயர் அமைப்புகள் மட்டுமல்ல சிங்கள, முஸ்லிம் புலம்பெயர் அமைப்புகளும் உள்ளன. அவர்களும் பாரிய செல்வந்த நிலையில் உள்ளனர். அவர்கள் இன்றும் நாட்டை நேசிக்கின்றனர். அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்போதுதான் அவர்களின் நிலைப்பாடும் என்னவென்பது தெரியும்.

31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
19 • 10 • 1938

தெய்வ திருவடியில்
25 • 10 • 2021

திருமதி மகேஸ்வரி கோபாலசிங்கம்

காலஞ்சென்ற திரு.தம்பு கோபாலசிங்கம் (ராஜ்கோபால்ஸ், யாழ்–கொழும்பு) அவர்களின் மனைவி

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பண்பிற்கும்
பாசத்திற்கும் உறைவிடமாய் எம்மைக் காத்த தெய்வமே!
உங்கள் வெற்றிடத்தை மீள் நிரப்ப முடியவில்லை
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில் என்றென்றும் நிலைத்திருக்கும்

எங்கள் குடும்பத் தலைவி இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும், சமூகவலைத்தளங்களினூடாகவும் ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் மலர் வளையம் அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

என்றென்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

46/1A, ஆனந்தகுமாரசாமி மாவத்தை, கொழும்பு 03.

மரண அறிவித்தல்

தோற்றம் 14 • 11 • 1971

மறைவு 21 • 11 • 2021

திரு. மாரிமுத்து உதயகுமார்

கொழும்பை பிறப்பிடமாகவும் திருகோணாமலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தின் ஆஸ்தான தவில் வித்துவான் திரு. மாரிமுத்து உதயகுமார் அவர்கள் 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2021 நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று. அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகவரி: 897, ஆவது பாடசாலை ஒழுங்கை,
செல்வநாயகபுரம்,
திருகோணமலை.

தகவல்: தவில் பாபு
(077727765!)

மரண அறிவித்தல்

தோற்றம் 09 • 04 • 1952

மறைவு 23 • 11 • 2021

திருமதி.யோகேஸ்வரி லோகேந்திரன்

கரவெட்டி, நவிண்டிலை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. யோகேஸ்வரி லோகேந்திரன் 23.11.2021 அன்று காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்பிள்ளை கந்தையா. அன்னம்மா கந்தையா ஆகியோரின் அன்பு மகளும். திரு.இராஜநாதன் லோகேந்திரனின் அன்பு மனைவியும். வைத்தியர். பிரசன்னா வருண் லோகேந்திரன். திருமதி. அனுஷலா ஜனனி மதிசுதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும். திருமதி. (வைத்தியர்) ருக்ஷா பிரசன்னா வருண். திரு.பரம்சோதிநாதன் மதிசுதன் (Quantity Surveyor, Qatar). ஆகியோரின் மாமியாரும். ராகவர்தினி பிரசன்னா வருண். ராகவி மதிசுதன் ஆகியோரின் அன்புப் பாட்டியும். மகேஷ்வரி இராஜலிங்கம் (Singapore). காலஞ்சென்ற கணேஷ்வரன் கந்தையா. யோகேஷ்வரன் கந்தையா. ஞானேஸ்வரி கந்தையா. ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24.11.2021 புதன்கிழமையன்று மாலை 3.00 - 6.00 வரை ஜெயரட்ண மலர்ச்சாலையில அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 25.11.2021 வியாழக்கிழமை மதியம் 1.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். **0777433947/ 0779411366**

மரண அறிவித்தல்

மலர்வு 11 • 02 • 1930

உதிர்வு 22 • 11 • 2021

திரு.S. தங்கவேல் உடையார்

ஹல்தும்முல்லை சொரகுணை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
S.தங்கவேல் உடையார் 22.11.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையார் உடையார் சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற ராமசாமி, பொன்னம்மாள் அவர்களின் மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாள் (பாப்பு) அவர்களின் பாசமிகு கணவரும், விசாலாட்சி, ராஜேஸ் ஆகியோரின் தந்தையும், கறுப்புடையார் (தர்மர்) நல்லுசாமி அவர்களின் மாமனாரும் தனேஸ், சரவணன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சொரகுணை இல்லத்தில் வைக்கப்பட்டு 24.11.2021 புதன்கிழமை பகல் 02 மணியளவில் அன்னாரின் தோட்ட மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- தனேஸ் - 077 361 9621
சரவணன் - 077 9555 553

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 • 05 • 1917

உதிர்வு 05 • 12 • 2020

கார்த்திகேசு ஆறுமுகம்

திதி: 24.11.2021

கண்மூடி திறக்குமுன்னே
காலமது உருண்டோடி
கழிந்தனவே ஓராண்டையா!
கண்களிலே கண்ணீர்தான்
கலங்கித்தான் வழியுதய்யா!
கனிவான உன் முகத்தை
காணத்தான் துடிக்குதய்யா!
எங்கள் குடும்ப குல விளக்கே
எங்கள் இதயத்தில்
என்றுமே அமரதீபமாய் ஒளிவீசி
காக்க வேண்டும் ஐயாவே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கரணவாய்

உங்கள் சாந்திக்காக
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

போதைப்பொருள்... (தொடர்ச்சி)

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரே வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் சபையில் கூறிய வேளையில் அதனை நிராகரித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் போதைப்பொருள் வர்த்தகர் என கூறினார். இதனையடுத்து இருவருக்கும் இடையிலான வாக்குவாதத்தில் சபை பரபரப்பானது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பில் குறுக்கீடு செய்த போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீதரன் எம்.பி. தனது உரையில், ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசார தேரர் ,போதைப்பொருள் பாவனை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஏன் பேசுவதில்லை எனக் கேட்கின்றார். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை இருந்ததா? கஞ்சா இருந்ததா? அல்லது யாராவது இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டார்களா? போதை வஸ்தாவ் யாரும் பாதிக்கப்பட்டார்களா அல்லது யாராவது அதனை உட்கொண்டார்களா?

2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அரசாங்கத்தின் ஆட்சி வந்த பின்னரே தொட்டிலிட்டு வடக்கில் போதைப்பொருள், கஞ்சா பாவனைக்கு விடப்பட்டன.படைகள் குவிக்கப்பட்டுள்ள வடக்கில் தற்போது எப்படி போதைவஸ்துக்கள் தாராளமாக புழங்குகின்றன? நாங்கள் எத்தனை தடவை போதைவஸ்துக்கள் தொடர்பில் இந்த சபையில் பேசியிருப்போம். நாம் போதைவஸ்துக்களுக்கு எதிரானவர்கள் என ஸ்ரீதரன் எம்.பி கூறிக்கொண்டிருந்த போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்தார்.

எனினும் அவருக்கு ஒலிவாங்கி வழங்கப்படாத நிலையில் சபை முதல்வரான தினேஷ் குணவர்தன எழுந்து சபைக்கு தலைமை தாங்கியவருக்கு சுட்டிக்காட்டியதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேரம் கொடுக்கப்பட்டது.

இதன்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகையில், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வியாபாரி.அவர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார். இது ஸ்ரீதரனுக்கு தெரியுமோ அல்லது மறைக்கிறாரோ தெரியாது. அத்துடன் மஹிந்த ராஜபக் ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என சில விடயங்களை செய்தாக ஏற்றுக்கொள்கின்றார். அதற்கு முன்னர் ஏன் செய்யப்படவில்லை ? அதற்கு முன்னர் அபிவிருத்தி செய்ய நீங்கள் விடவில்லை,தடைகளை ஏற்படுத்தினீர்கள் என்றார்.

ஸ்ரீதரன் எம்.பி. இதற்கு பதிலளிக்கையில், நான் அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கும் கையாள் அல்ல. ஆட்சியாளர்களின் கால்களைக் கழுவும் வேலையும் செய்யவல்லல்.அல்லது உயிருக்கு பயந்து கவச வாகனங்களில் பயணிப்பவனுமல்ல .தமிழர்கள் எதற்கும் துணிந்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த போது அவரின் நேரம் முடிவடைந்து விட்டதாகக் கூறி வேறு ஒருவருக்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

ஸ்ரீதரன் எம்.பி. டக்ளஸ் தர்க்கத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ,நிதி அமைச்சர் பஸில் ராஜபக் ஷ,ஆகியோரும் சபையில் இருந்தனர். அரச தரப்பின் கடுமையான கூச்சல்களுக்கு மத்தியிலேயே ஸ்ரீதரன் எம்.பி. உரையாற்ற தொடங்கினார்.

கிண்ணியா... (தொடர்ச்சி)

ஆதரவுடனான கிண்ணியா நகர சபை அனுமதி வழங்கியுள்ளதாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

எனவே இதனால் ஏற்பட்டுள்ள விபரீதத்தின் அரச தரப்பின் மீது கூடத் துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துள்ள முயற்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டம் , கிண்ணியா பகுதியில் குறிஞ்சாக் கேணி களப்பில் நேற்று செவ்வாய்க் கிழமை படகு கவிழ்த்து 6 பேர் உயிரிழந்ததையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா அங்கு பாலத்தை நிர்மாணிப் பதற்கு அடிக்கல் நாட்டிய போதிலும் இதுவரையில் நிர்மாணப்பணிகள் முழுமையடையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்ட விடயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் , எவ்வாறிருப்பினும் இந்த சம்பவத்துக்கு அரசாங்கம் என்ற ரீதியில் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம். இது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். குறித்த படகு பயணித் தமைக்கும் விதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.நீண்ட காலமாக குறித்த களப்பின் ஊடாக பாலமொன்று நிர்மாணிக்கப்படவில்லை என்பதோடு அதற்காக நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. அந்த மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வாக எமது அரசாங்கத்தினால் குறித்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனை துரிதமாக நிறைவு செய்வோம்.

அமெரிக்காவுக்கான...

(தொடர்ச்சி)

புறப்படுகின்றேன். இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் எனது பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்கவுள்ளேன் என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க சபையில் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் உறவைப்பலப்படுத்த வேண்டும். அதற்தான பணிகளை ஆரம்பிக்கவே நான் அங்கு பயணிக்கின்றேன் எனவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

மனித உரிமைகள் பேரவை மிக முக்கியமான ஸ்தாபனமாகும். ஆனால் கடந்த காலத்தில் பேரவையில் நாம் படுதோல்வி அடைந்துள்ளோம். ஆணையாளர் கூறும் அனைத்தையும் உண்மையென தீர்மானிக்கவும் கூடாது. அவருக்கு கிடைக்கும் தகவல்கள் முற்று முழுதாக உண்மையும் அல்ல. அதேபோல் மனித உரிமைகள் பேரவை குறித்து பேசும்போது அங்கு அங்கம் வகிக்கும் 47 நாடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தி, எமக்கு எதிராக பிரேரணை எதுவும் கொண்டுவரும் வேளையில் அனைவரும் எதிரானவர்கள் என நினைக்கவும் கூடாது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளுடன் நாம் பாரிய ஏற்றுமதி இணைப்பொன்றை வைத்துள்ளோம். எனவே இந்த நாடுகளை நாம் பகைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் எமக்கு எதிராக பிரேரணை ஒன்றினை முன்வைக்கும் வேளையில் நாம் கதவை மூடக்கூடாது. அவர்களுக்கு இடம் வழங்கி நாம் இங்கு என்ன செய்கின்றோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும். யுத்தத்துக்கு பின்னர் வடக்கு கிழக்குக்கு செய்யும் பாரிய வேலைத்திட்டம் குறித்த உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும்.

இந்நிலையில் எனது தனிப்பட்ட அறிவிப்பொன்றை முன்வைக்கின்றேன். அமெரிக்காவுக்கான தூதுவராக என்னை கடமையாற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ என்னிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்தார். அவரது கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் பாராளுமன்ற பதவியை துறந்து 29 ஆம் திகதியளவில் அமெரிக்காவை நோக்கிப் பயணிக்கவுள்ளேன்.

ஒரு மாதத்துக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அமெரிக்கா பாரிய வெற்றி பெற்று மனித உரிமைகள் பேரவையில் மீண்டும் அங்கத்துவ நாடாக மாறியுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி உறுப்புரிமையை பெற்றுக்கொள்கின்றது. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பிரதிநிதியாக எனது பத்து ஆண்டுகால அனுபவத்தில் நான் ஒன்றை கூறுகின்றேன். மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவே தலைமை தாங்கும். ஆகவே அமெரிக்காவுடன் எமது நட்புறவையும் தொடர்பையும் அதிகரிக்க வேண்டும்.அதுவே அவசியமான காரணியாகும். பொருளாதார ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் உறவைப்பலப்படுத்த வேண்டும். அதற்கான பணிகளை ஆரம்பிக்கவே நான் அங்கு பயணிக்கின்றேன்.

நான் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளவில்லை. ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய நாட்டுக்கு சேவையாற்றவே நான் அங்கு செல்கின்றேன். அங்கிருந்து மீண்டும் நாடு திரும்பியவுடன் எனது மக்களுக்காக மீண்டும் சேவையாற்ற நான் என்னை இணைத்துக்கொள்வேன் என்றார்.

புதிய... (தொடர்ச்சி)

அர்த்தமுள்ளதா என சபையில் சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக் ஷ்மன் கிரியெல்ல , புதிய அரசியல் அமைப்பின் ஊடாகவேனும் அதிகார பரவலாக்கலை உறுதிப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் சகல கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான தெரிவுக் குழு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது இடம்பெற்றது. இன்று ஜனாதிபதி என்ன செய்கின்றார். தனது தனிப்பட்ட சட்டத்தரணிகளை கொண்டு அரசியல் அமைப்பை உருவாக்குகின்றார். இவ்வாறு செயற்பட்டால் இந்த அரசியலமைப்பையும் வர்த்தமானிகள் போன்று மீளப் பெற்றுக்கொள்ள வேண்டிவரும். அதுவே இடம்பெறும். எமது யோசனைகளை முன்வைக்கையில் 13 ஆவது திருத்தம் தவிர அனைத்தையும் கூறுங்கள் எனவும் கூறினார்கள். ஒருபுறம் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து பேசிக்கொண்டு மறுபுறம் 13 ஏற்றுக்கொள்ளப்படாதென கூறுகின்றனர். இந்த செயற்பாட்டில் அர்த்தமுள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பட்டாலி இந்த அரசியலமைப்பையும் வர்த்தமானிகள் போன்று மீளப்பெற்றுக்கொள்ள வேண்டிவரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்களின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

நல்லாட்சியின் சுயாதீனமாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் இன்று 20 ஆவது திருத்தத்தின் மூலமாக அதன் சுயாதீனத்தை இழந்துள்ளன. நிறைவேற்று அதிகாரத்தின் மூலமாக இவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எமது ஆட்சியில் ஜனாதிபதியின் கோரிக்கையைக் கூட நிராகரிக்கும் அதிகாரம் சுயாதீன அணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இன்று அதன் சுயாதீனம் அழிக்கப்பட்டுள்ளது. அன்று சந்திரிக்கா குமாரதுங்கவின் ஆட்சியில் ஜே.வி.பி. வலியுறுத்தியதற்கு அமைய இவை உருவாக்கப்பட்டன. இன்று அதன் நிலைமை மோசமாகியுள்ளது. சுயாதீன நீதி மன்றம் இல்லாத காரணத்தினால் இன்று முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வர விரும்பவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முதற்கொண்டு 20 ஆவது திருத்தத்துக்கு எதி ரான நிலைப்பாட்டில் உள்ளனர். இது இலங்கையின் நற்பெயருக்கு பாரிய களங்கமாகும்.எமது அரசாங்கத்தில் 19 ஆவது திருத்தத்தை உருவாக்கி நீதிமன்ற சுயாதீனத்தை உறுதிப்படுத்தினோம். அரச அதிகாரத்துக்கு நாம் அடிபணியவில்லை. இன்று 20 ஆவது திருத்தத்தில் பல குறைபாடுகள் இருந்தும் எவ்வாறு நீங்கள் இதற்கு ஆதரவு வழங்கினீர்கள் என்ற கேள்வி எம் மத்தியில் உள்ளது. அதிகாரப் பரவலாக்கல் இல்லையென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது. எனவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத் தினேலும் இவற்றை உறுதிப்படுத்துங்கள். இன்று புதிய அரசியலமைப்பு குறித்து பேசுகின்றனர். நாம் இன்னும் அதன் நகலை கூடப் பார்க்கவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் சகல கட்சிகளின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான தெரிவுக்குழு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது இடம்பெற்றது. இன்று ஜனாதிபதி என்ன செய்கின்றார். தனது தனிப்பட்ட சட்டத்தரணிகளை கொண்டு அரசியல் அமைப்பை உருவாக்குகின்றார். இவ்வாறு செயற்பட்டால் இந்த அரசியலமைப்பையும் வர்த்தமானிகள் போன்று மீளப் பெற்றுக்கொள்ள வேண்டிவரும். அதுவே இடம்பெறும். எமது யோசனைகளை முன்வைக்கையில் 13 ஆவது திருத்தம் தவிர அனைத்தையும் கூறுங்கள் எனவும் கூறினார்கள். ஒருபுறம் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவது குறித்து பேசிக்கொண்டு மறுபுறம் 13 ஏற்றுக்கொள்ளப்படாதென கூறுகின்றனர். இந்த செயற்பாட்டில் அர்த்தமுள்ளதா எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

குறிஞ்சாக்கேணி..

(தொடர்ச்சி)

இதற்கு யார் காரணம் எனவும் ரவூப் ஹக்கீம் மற்றும் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பினர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் தனது அனுதாபத்தை சபையில் முன்வைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் சபை அமர்வுகள் கூடிய வேளையில் விசேட கூற்றொன்றை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிண்ணியா பிரதேசத்தில் படகு கவிழ்த்த விவகாரம் குறித்து சபையில் கூற்றொன்றை முன்வைத்தார். அவர் கூறுகையில்,

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் இன்று(நேற்று) அனர்த்தமொன்று இடம் பெற்றுள்ளது. குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த பாதையை நிர்மாணிப்பதற்கு பதிலாக தற்காலிகமாக போடப்பட்ட பாதையில் விபத்தொன்று ஏற்பட்டு தற்போது வரையில் பத்துப்பேர் இறந்துள்ளனர். பாடசாலை செல்லும் சிறுவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். இது மிகப்பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. இந்த பாலம் புனரமைக்கும் விடயம் குறித்து இதற்கு முன் னரும் நான் இதே சபையில் முன்வைத்தேன். உரிய அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய வேளையில், பதில் பாதையொன்று உருவாக்காது எவ்வாறு பால நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன என கேள்வி எழுப்பிய வேளையில் விடயத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் இதனை ஒரு கேவலமான அல்லது நகைப்புக்குரிய விடயமாக எடுத்துக்கொண்டார். அதற்கான விளைவாக இன்று பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இந்த தற்காலிக படகு பாதை யாருடைய அனுமதியுடன் இயங்குகின்றது. சட்டமுறைப்படி இயங்குகின்றதா? யார் பொறுப்பு? இதற்கு அரசாங்கம் கூறும் பதில் என்னவென கேள்வி எழுப்பினார்.

இதன்போது சபையில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் :

பாலம் புனரமைக்க எடுக்கப்படும் முயற்சியை நாம் வரவேற்கின்றோம். ஆனால் இடைப்பட்ட காலத்தில் எவருடைய அனுமதியும் இல்லாத வகையில் படகுப்பாதை சேவைகளை முன்னெடுத்ததன் விளைவாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சிறிய படகில் அளவுக்கு அதிகமான நபர்களை ஏற்றியமையே இதற்குக் காரணம். விதி புனரமைப்பு அதிகாரசபையின் அனுமதி இல்லாது எவ்வாறு இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என கேள்வி எழுப்பினார்.

இதேவேளை சபையில் நேற்று 27/2 இன் கீழ் விசேட கூற்றொன்றை முன் வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கிண்ணியா அனர்த்தம் குறித்து கருத்துத் தெரிவித்தார். அவர் கூறுகையில், கிண்ணியா குறிஞ்சாக்கேணி அனர்த்தம் வருத்தமளிக்கிறது. ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும் 11 பேர் காணாமல் போயுள்ளதாகவும் மூவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் பணிப்பில் இராஜாங்க அமைச்சர் நிமால் லன்சா அடிக்கல் நாட்டி பாலமொன்றை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்தார். எனவே குறித்த வேலைத் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டும். அதேபோல் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்துக்கு நட்டஈடு பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்துடன் குறித்த படகு சேவையின் செயற்பாடுகள் குறித்து விசாரணையொன்று நடத்தி உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். உயிரிழந்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம் என்றார்.

எதிர்க்கட்சி... (தொடர்ச்சி)

அத்துரலியே ரத்ன தேரர் மற்றும் அலி சப்ரி ரஹீம் ஆகிய இருவரையும் எதிர்க்கட்சியின் முன்வரிசை ஆசனத்தில் இருந்து இடமாற்ற வேண்டும் என எதிர்க்கட்சியினர் சபையில் வலியுறுத்தினர்.

எனினும் இதனை நிராகரித்த சபாநாயகரும் ஆளுங்கட்சியும் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்கி அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்பட வைத்ததோடு இவையெல்லாம் உங்களுக்கு விளங்கவில்லையா என கேள்வி எழுப்பினர்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் சபை அமர்வு கூடிய வேளையில், ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார :

சபாநாயகரினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசன மாற்றங்களை மேற்கொள்ள முடியும். எதிர்க்கட்சி தரப்பின் முன் வரிசை ஆசனங்களை ஒதுக்கிடு செய்யும் வேளையில் அத்துரலியே ரத்ன தேரர் மற்றும் அலி சப்ரி ரஹீம் ஆகிய இருவரும் எதிர்க்கட்சியின் முன்வரிசையில் உள்ளனர். ஆனால் அவர்கள் எப்போதும் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். எதிர்க்கட்சியின் முன்னணி ஆசனங்களில் ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் இருவர் இருப்பது எதிர்க்கட்சிக்குள் ஒற்றர்கள் இருப்பது போன்றது. இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் இதே விடயத்தை முன்வைத்துள்ளோம். ஆனால் இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. எனவே இதற்கு தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதில் தெரிவித்த சபாநாயகர் : இந்த விடயம் அவர்களின் கட்சி சார்ந்த விவகாரமாகும். குறித்த கட்சிகள் எடுத்த தீர்மானங்கள் தொடர்பில் என்னால் தலையிட முடியாது என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர : எதிர்க்கட்சியினர் பாராளுமன்ற சம்பிரதாயம் என்னவென்பதை தெரிந்துகொள்ள வேண்டும். எந்தவொரு கட்சியினதும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கட்சியின் சார்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினால் அவருக்கு முன்வரிசை ஆசனம் வழங்கப்படும். அது உங்களுக்கும் பொருந்தும். அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது அவர்களின் தனிப்பட்ட விருப்பமாகும். அதற்காக அவர்களை அரசாங்கத்தில் பக்கம் தள்ள வேண்டாம் என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக் ஷ்மன் கிரியெல்ல : சில காலத்துக்கு முன்னர் முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துக்கு ஆதரவளித்தனர். அவர்களை ஆளுங் கட்சி பக்கம் அமரவைக்க வேண்டும் என நான் உங்களிடம் கோரிக்கை விடுத்தேன். அதற்கமைய அவர்களை ஆளுங்கட்சி பக்கம் அமரச்செய்தீர்கள். இவர்களுக்கும் அதே நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் முன் வரிசையில் இருக்க முடியாது என்றார்.

ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சபை முதல்வர் நிமேஷ் குணவர்த்தன : இந்த விவகாரம் குறித்து யாரும் கருத்துத் தெரிவிக்க முடியும். ஆனால் சபாநாயகரினால் தான் தீர்மானம் எடுக்கப்படும். இது தான் சம்பிரதாயமும் கூட. ஆகவே இதனை தெரிந்துகொள்ளாது கதைக்கக்கூடாது. நாட்டை ஏமாற்றும் விதமாக இவற்றை கூறலாம். ஆனால் இதே குற்றச்சாட்டை முன்வைக்கும் தரப்பினர் அரசாங்கத்திலே இருந்த காலத்திலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கொடுத்தனர். எதிர்க்கட்சியின் சிறுபான்மை கட்சியாக இருந்தும் அவர்கள் எதிர்க்கட்சி பதவியை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். ஒவ்வொரு முறையும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே வாக்களித்தனர். இந்த காலகட்டத்தில் எதிர்க்கட்சி பதவியை எமக்கு வழங்குமாறு கேட்டோம். ஆனால் அவர்களின் ஆசனத்தை பறிக்க வேண்டும் என கோரவில்லை. நாம் பாராளுமன்ற சம்பிரதாயத்தை மீறவில்லை. ஆகவே இவர்கள் பாராளுமன்ற விதிமுறைகளை மீறியே ஒவ்வொரு நாளும் செயற்பட்டுக்கொண்டுள்ளனர் என்றார்.

மீண்டும் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய லக் ஷ்மன் கிரியெல்ல : நிகழ்கால பாராளுமன்றத்தில் சபாநாயகர் முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்தே நாம் பேசுகின்றோம். அதற்கமைய அவர்களை அரசாங்கத்தின் பக்கம் மாற்றுங்கள் என்றார்.

படகுப்பாதை... (தொடர்ச்சி)

இப்படகுதியில் காணப்பட்ட கிண்ணியா குறிஞ்சாக்கேணி 2020 ஆம் ஆண்டு உடைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இந்த படகுப்பாதை மூலம் களப்பு ஊடாகவே போக்குவரத்து இடம்பெற்று வந்தது. இந்தப் படகுப்பாதையைப் பயன்படுத்தியே பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்றுவந்ததுடன் கிராமமக்களுக் இந்தப் பாதையை பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில்தான் படகுப்பாதையில் மாணவர்களும் கிராம மக்களும் நேற்றுக்காலை பயணித்தபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

படகுப்பாதையில் அளவுக்கதிகமான பயணிகள் ஏற்றப்பட்டமையினாலேயே இந்த விபத்து சம்பவித்திருக்கலாம் என்று தெரியவருகின்றது. படகுப்பாதை கவிழ்த்ததையடுத்து அதில் பயணித்தவர்கள் நீரில் மூழ்கியுள்ளனர். மூழ்கியவர்களுள் 4 மாணவர்கள் உட்பட 6 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 21 பேர் மீட்கப்பட்டு கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களுள் சிலர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

பெரிய கிண்ணியா மகளிர் கல்லூரி, அல் அஸ்கர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

படகுப்பாதை கவிழ்த்ததையடுத்து மீட்புப் பணிகள் இடம்பெற்றன. கடற்படையினரின் உதவியுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மூழ்கியவர்கள் மீட்கப் பட்டதையடுத்து அவர்களது பொருட்களும் மீட்கப்பட்டன. பலியான பாடசாலை மாணவர்களது புத்தகப் பைகள் மற்றும் உபகரணங்களும் மீட்கப்பட்டிருந்தன.

சம்பவம்

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் பாடசாலை மாணவர்கள், முதியோர் மற்றும் தொழிலுக்குச் சென்றோர் என 30 இற்கும் மேற்பட்டோர் இந்தப் படகுப்பாதையில் பயணித்துள்ளனர். கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வருவதால் , குறித்த பகுதியூடாகப் பயணிப்பதற்கு தற்காலிகமாக இந்த களப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. 7.30 மணியளவில் படகுப்பாதை கவிழ்த்த போதிலும் நேற்று பகல் 1 மணி வரையும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப் பட்டன.

கிண்ணியா வைத்தியசாலை

விபத்தின் பின்னர் படகில் பயணித்த 21 பேர் மீட்கப்பட்டு கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்களுள் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கிண்ணியா ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சர் வைத்தியர் ஐ.எம். ஜவாஹிர் உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களுள் இருவர் கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டுள்ளதோடு இருவர் சிகிச்சை பெற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். எஞ்சிய அனைவரும் தொடர்ந்தும் கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியர் ஐ.எம்.ஜவாஹிர் மேலும் தெரிவித்தார்.

4 சிறுவர்கள் உள்ளிட்ட 6 பேர் பலி

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவில் குறிஞ்சாக்கேணி பகுதியில் பயணிக்கள் பயணித்த படகுப்பாதை கவிழ்த்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களுள் 70 வயதுடைய முதிய வரொருவர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய தாயொருவரும் குறித்த தாயின் 6 வயதுடைய மகள் மற்றும் மூன்றரை வயதுடைய மகளும் , பிறிதொரு குடும்பத்தைச் சேர்ந்த மூத்த மற்றும் இளைய சகோதரிகள் இருவரும் உள்ளடங்குவதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கிண்ணியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் 19 பேரில் 5 ஆண்கள், 6 பெண்கள், முதியவர்களில் 4 ஆண்களும் 4 பெண்களும் உள்ளடங்குகின்றனர். அத்தோடு திருகோணமலை பொது வைத்தியசாலையில் 6 வயதுடைய பெண் குழந்தையொன்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறது. விபத்து இடம்பெற்ற களப்பு பகுதியில் கடற்படை மற்றும் பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் பணிகள் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நி

Kesari City Classifieds

தேவை Wanted

ஹோமாகம, பனாகொடை Templeburg industrial இல் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பயிற்சியுள்ள / பயிற்சியற்ற பணியாளர்கள் உற்பத்தி பிரிவுக்கு தேவை. 18 - 32 வயதுக் குட்பட்டவர், சிறந்த சம்பளம் மற்றும் சலுகைகள். தொடர்புகளுக்கு - 077 8869803

கொழும்பு 11 இல் அமைந்துள்ள மொத்த புடவை விற்பனை நிலையத்திற்கு (Wholesale Textiles), விற்பனையாளர் (Sales Man), பில்லிங் கிளார்க் ஆண்/ பெண் (Billing Clerk), (Computer Operator) தேவை. மாத சம்பளம் பெண்கள் 30,000/= முதல். ஆண்கள் 36,000/= முதல் 50,000/= வரை ஞாயிறு மற்றும் போயா விடுமுறை. தங்குமிட வசதி உண்டு. மலையகத்தவர்கள் விரும்பத்தக்கவர்கள். மூல சான்றிதழ்களுடன் நேரில் வரவும். இல.7, மூன்றாம் குறுக்குத்தெரு, கொ மும்பு - 11.

Account Assistance தேவை. (பெண்கள்) Colombo-13, Wolfendhal Street இல் உள்ள எலக்ட்ரானிக்ஸ் Sales and Service கடைக்கு Accounts மற்றும் internet & online work செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை. Colombo -13 இன் அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ப Rs. 40,000/= வரை சம்பளம் கிடைக்கும், மும்மொழி அறிவும், வியாபார திறமையும் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும். T.ராஜ்குமார் : 0777710785

கொழும்பு வீடுகளில் தங்கியிருந்து சமையல் வீட்டு வேலைக்கு பெண்கள் தேவை. சம்பளம் 30,000/= - 35,000/= வழங்கப்படும். தோட்ட வேலைக்கு ஆண்கள் தேவை. 071 7539333 ஏஜன்சி

வெள்ளவத்தையில் Delivery Boy தேவை. தொடர்புகளுக்கு - 076 0331432

இரவு பாதுகாப்பிற்கு மிருக கருணையுடைய ஓய்வு பெற்ற தங்கி வேலை செய்யக்கூடிய குடும்ப பாரமற்ற பாதுகாவலர் தேவை. வத்தளை. 077 3511030 (சிங்களத்தில் கதைக்கவும்)

சிங்களம் பேசக்கூடிய OIC - SSO - JSO கொழும்பு, வத்தளை, ஜா-எல, சீதுவ, நய்வல வேலைவாய்ப்பு. அதிகூடிய சம்பளம். 077 6142760

கொட்டாஞ்சேனையில் உள்ள Textile Showroom ஒன்றிற்கு O/L, A/L படித்த பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு - 077 9280225

மேசன் வேலைவாய்ப்பு. தொடர்பு - 077 3097803 இல.71/3, பாமன்கடை வீதி, கொழும்பு - 06

3000kg செம்பு தேவை. தொடர்பு - 077 3097803. இல.71/3, பாமன்கடை வீதி, கொழும்பு - 06

பேலியகொட மற்றும் ஒருகொடவத்தையில் அமைந்துள்ள எமது நிறுவனங்களிற்கு 18 - 45 வயதிற்கிடைப்பட்ட தொழிற்சாலை உதவியாளர்கள் தேவை. காலை மற்றும் பகல் உணவு இலவசம். ரூ.40,000/= இற்கு அதிகமான சம்பளம். 0777 314955, 076 6908943

வத்தளையில் அமைந்துள்ள சைனீஸ் பார் என்ட் ரெஸ்டுரண்ட் நிறுவனத்திற்கு 50 வயதிற்கு குறைந்த திறமையான அனுபவமுள்ள சைனீஸ்/ தாய் உணவுகள் செய்வதற்கு Cook தேவை. சம்பளம் 3000/= - 1500/= இற்கிடையில். 077 3209896, 075 1612646

வெள்ளவத்தையில் அமைந்துள்ள பிரபல்யமான சல்வார் காட்சியறைக்கு விற்பனைத்துறையில் முன்னனுபவமுள்ள Sales Girls உடனடியாக தொடர்பு கொள்ளவும். (வயதெல்லை 20 - 32), சம்பளம் 28,500/= - 31,000/= வரை வழங்கப்படும். 011 2367778, 011 594 5994, 076 9665011

வெள்ளவத்தையில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் தொடர்மாடி கட்டிடத்திற்கு மேசன் கூலியாட்கள் வேலைக்கு தேவை. (நாளொன்றுக்கு 2500/=) தொ.பே: 076 4422004

கிரிபத்கொடயில் அமைந்துள்ள வாகன சேர்விஸ் நிலையத்திற்கு ஜெக் இயக்குவதற்கு அனுபவமுள்ள மற்றும் வாகனம் கழுவுவதற்கு அனுபவமுள்ள/ அனுபவமற்ற வேலையாட்கள் தேவை. 077 7226209, 075 7226207

மாகொல கடையொன்றுக்கு கொத்து பாஸ் ஒருவர் தேவை. 076 5425060, 070 1261167

ரோல்ஸ், சமோசா போடுவதற்கு ஆட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் அழைக்கவும். 20 வயதுக்கு உட்பட்ட Boys and Girls உடன் தேவை. கஷ்டமான குடும்பத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (ஜா-எல கந்தானை) சம்பளம் - 20,000/= - 80,000/= வரை. தொடர்புகளுக்கு : 076 6383858

Electricians மற்றும் Electrical உதவியாளர்கள் தேவை. Electrical உதவியாளர் சம்பளம் 2000/= Electrician சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். 077 9286652

ஜோதிடம் Astrology

பிரிவால் வேதனையா நல்ல நட்பை இழந்து விட்டீர்களா? வீண் கவலை வேண்டாம் நீங்கள் நினைப்பது நடக்கும் கைரேகை, எண் ஜோதிடம், ஜாதகப்பிரசன்னம் மூலம் தொழில் நஷ்டம், திருமணம், வெளிநாட்டு பயணம், அதிர்ஷ்டம், கடன் தொல்லை நீங்க மற்றும் எதிர்காலத்தை தெளிவாக அறிந்து நிம்மதியுடன் வாழ ஜோதிட மனவள ஆலோசகர் சாமி கங்காதரன் ஜயாவை தொடர்பு கொள்ளுங்கள். 077 2105957 இரகசியம் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாக்கப்படும். No. 145/1, Galle Road, Colombo - 06. 0777 310088, 011 2055655

வாடகைக்கு For Rent

பாதுகாப்பான அறை குளியலறையுடன் பெண்கள், முதியோர்க்கு உண்டு. எல்லா வசதிகளுடன் பெரிய அறை. தொடர்புகளுக்கு - 076 6681416, 011 360 905, 071 6419047

அல்விஸ் வத்தை, ஏக்கித்த வத்தையில் 05 அறைகள், 02 குளியலறைகள், தனியான அனெக்ஸ் உடன் வீடு வாடகைக்கு உண்டு. 077 4449060. மட்டக்குளிய பாலத்திற்கு 01km தூரம்

Wellawatte Rudra Mawatha இல் ஆண் ஒருவருக்கான அறை வாடகைக்கு உண்டு. (Private Bathroom, TV, Vehicle Park, Washing Machine) மேலதிக விபரங்களுக்கு - 076 3767534

வீடு/காணி விற்பனைக்கு

கொழும்பு - 15, 6 Perch 3 வீடு (மாத வருமானம் 150,000/=) 47 Million, வத்தளை, ஹேக்கித்த 20 Perch. 3 வீடு (மாத வருமானம் 160,000/=) 65 Million. பார்வையிட்டபின் விலை பேசித்தீர்மானிக்கலாம். தொடர்பு - 076 7444424 / 077 4544098

39 பேர்ச்சஸ் வெற்று நிலம் கிராண்ட்பாஸ் வீதியில் விற்பனைக்கு உண்டு. சுத்தமான உறுதி தேவைப்படுவோர் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 071 2200027 - 075 7000201

கொள்ளுப்பிட்டியில் புத்தம் புதிய Luxury Apartment விற்பனைக்கு 1850 சதுரஅடி 4 Bedroom சேர்வன்ட் Room & Bathroom, 2 nd Floor (2 Car Park). விலை 65 மில்லியன். தொடர்பு - Rajini - 0777 062499

பழுதுபார்த்தல் Repair

எல்லாவிதமான குளிரூட்டிகள் (Fridges) சகலவிதமான தொலைக்காட்சிகள் TV, A/C, Washing Machine ஆகிய திருத்த வேலைகள் உங்கள் வீடுகளுக்கு வந்து துரிதமாக திருத்திக்கொடுக்கப்படும். (St.jude Electronics) ஜுட்பர்ணாந்து (டிலான் செல்வராஜா) இல. 104/37, சங்கமித்த மாவத்தை, கொழும்பு - 13. Tel:- 0112388247, 072 2199334

கணனிக்கல்வி Computer Studies

சகல கம்பியூட்டர் பாடங்களும் SPOKEN ENGLISH உம் அடிப்படையிலிருந்து கற்க முடியும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ். கம்பியூட்டர் துறையில் வேலைவாய்ப்பிற்கும் சுயதொழில் செய்வதற்கும் ஏற்பாடு செய்து தரப்படும். வயதெல்லை கல்வித்தகைமை போன்ற தடைகள் இல்லை. நேரடியாகவோ ஒன்லைன் மூலமாகவோ கற்க முடியும். ஒவ்வொரு வாரமும் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ISS, இல.78, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13. www.issUniversity.com 072 2000999

கடை வாடகைக்கு Shop for Rent

நீர்கொழும்பில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும். வாகன Showroom, பார்மசி, சுப்பர்மார்க்கட்டுக்கு உகந்தது, A/C, பார்க்கிங் வசதி, கெமரா வசதிகளும் உண்டு. 076 3100142

சேவை Service

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகைத்தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை. AAA Gold Center. 076 5684346

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? கவலையை விடுங்கள் நாங்கள் மீட்டு சந்தைப் பெறுமதி அவ்விடத்திலேயே தரப்படும். 077 6151283

உங்கள் சகலவிதமான விளம்பர தேவைகளுக்கும் அழைக்கவும்
011 7322738, 011 7322735, 011 7322739

பெயர் மாற்றம்

484-1C, தெமட்டகொட வீதி, கொழும்பு-9ஐச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல.199409500465ஐ கொண்ட அந்தோனிதாசன் கிருஷ்ண பிரசாந்த் ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை மொஹமத் ஆதில் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

மொஹமத் ஆதில் 03.11.2021

வென்போல் அஸ்வபல வர்தனி
திருமணமான ஆண்கள் இழக்கும் சக்தியை மீளப்பெற வேண்டும்.
உணவுகளால் கிடைக்காத தினந்தோறுமாக பாவிக்கக்கூடிய 100% இயற்கையான உபரி போஷனை சேர்க்கை
வென்போல் அஸ்வபல வர்தனி
உயர் சக்தி லேகியம்
80 குளிகைகள் 890/=
கல்தூரி 4 குளிகைகள் 490/=
0774 525 425
சகல ஆங்கில , சிங்கள மருந்தகங்களில் பெற்றிடலாம்.



பெயர் மாற்றம்

இல.4/1, ராகலை எஸ்டேட், ஹல்கிரன்ஓயவைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இலக்கம் 956430739V கொண்ட வைத்திலிங்கம் திலானி (VAITHILINGAM DILANI) ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை கப்கொட்டுவே கெதர ராஜபக்ஷ முதியன்சலாகே திலானி தில்ருக்ஷி (KAPKOTUVE GEDARA RAJAPAKSHA MUDIYANSALAGE DILANI DILRUKSHI) என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

22.11.2021 K.G.R.M.DILANI DILRUKSHI

பெயர் மாற்றம்

இறக்காமம்-02, இல.3/2, வாங்காமம் 11A கிராமத்தைச் சேர்ந்த பிறப்புச்சான்றிதழ் இலக்கம்.5875ஐ கொண்ட அந்தோனி அஞ்சலின் அருட் செல்வி ஆகிய நான் இன்றுமுதல் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை அந்தோனி கதிஜா என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

அந்தோனி கதிஜா 18.11.2021

நம்பகத்தன்மையான நடைமுறை தகவல்கள் துரிதமான விபரங்களுடன்
www.virakesari.lk

பெயர் மாற்றம்

இல.93/71, அவிசாவளை வீதி, ஒருகொடவத்தையைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல.199417800130ஐ கொண்ட வீரையா சமன் சஜீவ ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை வீரையா புகழ் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

வீரையா புகழ் 22.11.2021

உலக தமிழ் செய்தி வரலாற்றில்
90 வருட பாரம்பரியத்தை கொண்டுள்ள,
இலங்கையின் முதன்நிலை
முதற்தர செய்தி வழங்குனர்
வீரகேசரி செய்திகள்
நடந்தவற்றை அப்படியே திரிபு இல்லாமல்
உள்ளது உள்ளபடியே உங்களுக்காக!
STAR தமிழ் TELEVISION
UHF 46 | DIALOG TV 22 | PEO TV 21
ASK CABLE 48 | CITY CABLE
தினந்தோறும் இரவு 7 மணிக்கு
காணத்தவறாதீர்கள்
வீரகேசரி STAR தமிழ் NEWS

கோலாகல திறப்பு விழா.!

புதுப்பொழிவுடன்

ஸ்ரீயானி

100% தூய சைவ உணவகம்

இன்று

24.11.2021 - புதன்கிழமை

SRIYANI

131

Pure Vegetarian Restaurant

131, Second Cross Street, Colombo -11. Tel: 0112 326289

Picasso

தலைநகரில் அறுசுவையான சைவ உணவை சுவைத்திட...

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்...!

131, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11

தொலைபேசி :
011 2326289 / 077 6405555

ரசிகர்களுக்கு அனுமதி

இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியை காண இன்று முதல் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மைதானத்தின் கிழக்கக அளவில் 35 வீதமான ரசிகர்கள் மைதானத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கிவைமசாக போட்டிகளை கண்டு களிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லங்கா பிரிமியர் லீக் தொடரை பார்க்க ரசிகர்களை மைதானத்திற்கு அனுமதிக்க சுகாதாரத் தரப்பிலிருந்து அனுமதி கிடைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று டுவிட்டர் தளத்தினூடாக அறிவித்துள்ளார்.

அத்தோடு தற்போது நடைபெற்றுவரும் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிக்கும் ரசிகர்களை அனுமதிக்கவும் முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கான லங்கா பிரிமியர் லீக்கின் இரண்டாவது தொடர் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் அரங்கிலும், இரண்டாவது சுற்றுப் போட்டிகள் சூரியவெவ விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளது.

லங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளுக்கு குறிப்பிட்டளவு ரசிகர்களை அனுமதிக்க சுகாதார தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டுச் 7ஆம் மேல்ல கம்பளிக் ஸ்ட்ரீன் 97ஆம் மில்லி மீற்றர் நீள்வரும் கம்பனி கூட்டுறவுக்கம்பட்டுக்க கீழ்ச்சி அறிவிக்கப்படுகிறது.

நேதாஜி இன்னைட்.லிமிட்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00208199
இல.107, வாவுலவல, முளையடி, நெறுறண.

எஸ்.பி.ஏ ஸ்பான்சொரிப்பாக் கல்லட்டுக்கல்
PV 00208247
இல.84, கீச்சுமிமன, முளையடி, நெறுறண.

மாரிர் ஸ்டிலாசன்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00208283
இல.12, 2ஆவது எலிடெ, நாந்தனல, நெறுறண.

சரோர் கல்லர் தனிப் பாதுகாவல்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00208349
இல.501/1, பெம்மெ சந்தி, பெலிபுய, நெறுறண.

நிறுவர் இன்னைட்.லிமிட்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00208924
இல.452, இந்தநியாரி வீதி, முளையடி, நெறுறண.

கிரிஸ்டல் இன்னைட்.லிமிட்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00209633
இல.653/1, பாடசாலை முன்பாக, வடைமடு, ஹுன்கொட்ட, பிலவலியா.

ஏஎல் எல் கம்பனி நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00210946
இல.50, வெஸ்லியன் எஸ்டேட், பத்தேகொட, கல்பத்த.

நுவரை நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00211946
இல.17, கதேரிங் சிங்கள மாவத்த, நெறுறண.

எஸ் ஏ எல் சிங்க கல்லட்டுக்கள்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00212168
இல.4/1, பொல்வத்த, குருகொட, நெறுறண.

ஜாரிஷ் இன்னைட்.லிமிட். (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00212238
இல.84, வாவுலவல ஹளபுல, முளையடி, நெறுறண.

எச்.சி.வி நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00212340
இல.2658/1, உடுகொமத்த, பெதலஹேதட.

ரூரான் கலர் மாஸ்டிறிஸ்கள் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00213088
இல.148, சிறிபாலபே பண்ணாரபங்க மாவத்த, கட்டுகலே, கண்டி.

கேதாரன் இன்டஸ்ரியலுக்கு (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00213089
இல.187/6, சிறி குணரான மாவத்த, கண்டி.ற, வரக்கலப்பிய.

மலரபிரிய இன்டஸ்ரீஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00213820
இல.204/D20, கதுப்பாரு மாவத்த, நெறுறண்ஸ்தர வடக்கு, பிலியந்தல.

ஏ. ஸாரிட்.டீ நெறுறண்டீஸ்கள் லண்.நு
GA 00215276
இல.50/5A, நாவத்த மெல், மட்டக்குளி, கொழும்பு - 15.

ஆக்கான் ஸாரிக்.ஏற் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00215962
இல.104/A, பெந்த பெரடெனி, குருந்தா, பொறுவாத்த.

சந்திரன் நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00216325
இல.55/1, உக்கல உடுவர, அங்குருவத்தொட்ட.

கிந்திக்க ஏ.டி.ரணவீர (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00216576
இல.287/25, புதிய கண்ட வீதி, கொத்தலாவல, கஹ்கல.

சாரதக் வரிசிரச (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00216733
இல.411, சாரங்க, காலி வீதி, வாலகடுவ.

ஒக் நோட்.டீ லண்.ஏற்.இன்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00217044
இல.241/60, வெருக்கொட்ட வீதி, மகந்தூர, கொச்சிக்கட.

கிங்ஸ்லாந்த லண்ட (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00217156
இல.34/A2, கனத்த வீதி, பொறலங்கட, பெருவளந்த.

மாரசிரி ஏட்.கண்.சிங் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00217333
இல.204/A/1, பண்டாரமா வீதி, கொழும்பு.

சீ ஏ ஏ லண்ட்.நெறுறண் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00217674
இல.55, இந்தநியாரி வீதி, பொறலந்தந்த, நெறுறண.

விஜய நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00217739
இல.539/B, பொலந்த, பிலவெல.

எஸ் எல். ஏட். (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00218170
இல.240/B, நுவலிலை, வாதுவ.

வைர கோமஷக் (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00218720
இல.296/3, பட்டத்த, கொலன்னாவ.

சீவன் லலாவ் லமு.வராக.கட்.லா
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00219535
இல.27/908, பாலவாரத்த, மாறபாக, வெலிக்கட.

சோர லண்.பிரா லண்ட (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00219931
இல.91/18, ஹெலுடன் லேன், கொழும்பு - 06.

லலி நா லமு வராக.கட்.லா (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00222451
இல.269, கலன்னில, நெறுறண.

லாப் லைசர் கன்ட்.நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00222705
இல.50/A, வரைலலாவ, கொலபொன.

ரிரூட். ட்ரண்ட் நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00223218
இல.379, நுகலங்கொட, ஹனபுல, பொறுவாத்த.

வலன்ஸர் சிஸ்டம் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00223386
இல.45/10, மாவிலாப வீதி, எத்தமல்லேட்ட.

வலந்த ட்ரண்ட் நெறுறண்ஸ் (நிறைவுடைய)
PV 00223861
இல.54, விலிபத்த, தொடங்கொட, கதுந்துறை.

லங்கிள் வலரசர் (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00223939
இல.188/B, ஹுனாவிலப, பொக்குறுவத்த.

ரோயல் கன்ட்.நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00224159
இல.18/2, ஸன்னஸ், துல்லர்தொட்ட, பண்டாரமா.

வரி வல்ல நெறுறண்ஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00225408
இல.297/8, வெதி வெலே வத்த, கடவேறேன, நெறுறண.

ரத்நா இன்டஸ்ரியல் நெறுறண்ஸ்
விலிட்.பட்.
PV 00225633
இல.132/1, இந்தநியாரி வீதி, நெறுறண.

நுவிது எண்டர்பிரைஸ் (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00225875
இல.240/27, "சுதரிய குளுப்", இந்தநியாரி வீதி, நெறுறண.

சீ.டீ.ஏ இன்டஸ்ட்.லிமிட். (நிறைவுடைய)
விலிட்.பட்.
PV 00226288
இல.792/D, தொடங்கறவே, மாலபே.

ஏ கே லாக்.லமு (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00226487
கருணாரத்ன கட்டப், சந்தை ஒழுங்கை, பண்டாரமா.

எச் ஏ லாக்.லமு ஸ்ரோர்ஸ் (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00228622
இல.8/B/20, சிங்ஸ் லைன், ஹபாமுல வீதி, பாத்தேகொட.

ஸன் ஹன்.ட்ர் லண்.நெறுறண் ஸன் (நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00229174
இல.334/1/1, கலுற லைலன் வீதி, மஹரகம.

ஹாரன் இன்டஸ்ரீஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00229555
இல.68/3, பெத்தேகன வீதி தெற்கு, பிட்கேட்டே, கோட்டே.

கிரேஷ் இன்னைட்.லிமிட்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00229697
இல.17/2, இங்கிரிய வீதி, எல்லேபொட, புத்தசிங்கள.

லங்கா சேர்ப்பு இன்னைட்.லிமிட்.
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00229767
இல.50/A, வொறலைமட, வைலபொட.

லங்கிள் லண்.பிரைஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00230737
இல.92/2, கோமாதுக்க வீதி, நெறுறண.

லங்கா நுவரான கம்பனி.லமி
GA 00231238
இல.5/7A, விரிபலன.ல மாவத்த, நாரதேனஸ்பிடி.

மாலிங்க் ஸாட்.டீ
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00231268
கதுருவத்த வீதி, கும்புக்க மேற்கு, கொலம்பரை சந்தி.

நீர் லண் நுவர் நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00231737
இல.182, பதுக்க மத்தேகம, ஹங்கிள் லமர் நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00232956
இல.62/1, கொறலைமட, கொலபொன சந்தி, நெறுறண.

நம் நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00233538
இல.98/2, கதுரு மீமேல், ஸங்கலிந்த, வெல்லம்பிடிய, நெறுறண.

அலிலாவ லைசன்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00233961
இல.199/2, வஸ்ஸன மீமேல், பஸ்ரன்நெறுன, மீமானமலை, நெறுறண.

கிந்தகுல் அலிட்.நெற நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00233597
இல.57, வெல்கிலன வீதி, கலேவல, பொக்குறுவிட்ட.

ஜயமான நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00235004
இல.187/1/2, வெலிவள வீதி, தங்கலை.

மதிநாரு லுறார் லைசன்ஸ்.ஏஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00235264
இல.40, துரலுஹலவிய, பல்லேவல, குளுட.ளமலை.

லங்கா ஸ்.டீ எண்ஜினியரிங்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00237573
இல.118/A/1, வொலங்வெலத்த வீதி, அநுலங்கொட, நெறுறண.

சிங்கள் கிங்கிங் (பிரைவ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00237762
இல.87/8/26, மாளிகாவத்த, கும்புக்க வடக்க, கொலம்பரை சந்தி.

நந்தாரா பவர்ஹவுஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00237785
இல.63/2, பெம்பர் வீதி, நிவுலபிட்டிய, பொறலங்கமுவ.

டு லண்.டு லாரன்ஸ்.லி
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00237911
இல.47C, கொலம்நெறுனல, பத்தேகொட, நெறுறண.

சன்டு இன்டஸ்ரியல்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00238122
இல.44/B, காலி வீதி, நெறுறினல.

மிஷன் லெ கொரேஷ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00238152
இல.604, மிஷன் லெ கொரேஷ், பமன்னாமுல, கொலபொன சந்தி.

லன்ஸர் நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00238857
இல.69, கதுருப்பிடிய, கலன்னில, நெறுறண.

ஸ.ஸாக் ஒட்.டீ நெறுன்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00238913
இல.15/1, வெருக்கி வீதி, ஸமாநபொல, பெலியத்த.

நிவாந்த போட்.பிக்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00239434
இல.833, உ.ம. மக்கமுர, மாவலவல.

வ.கிரேர் போட்.பிக்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00242859
இல.60, கொலபெல வீதி, கம்பஹுகொட, பண்டாரமா.

சன்ரிச் லலாவ்.டீஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00243080
இல.204/A/1, பண்டாரமா வீதி, கொழும்பு.

நாவலா லாண்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00243090
இல.98/D/8, பம்பலாபத்த, புகொட.

சீபு வெதுக் சாஜாஜன்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00245075
இல.202/01, குதுனன, பொலிய, பாதுக்க.

ரோயல் லன்ட்.ட்ரேஜன்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00245265
இல.456, அங்குருவத்தொட்ட வீதி, வாலல, நெறுறண.

கொய்ய கைய் வரைவாளர்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00245266
இல.76, ஸ்ரீ சோமரத்ன வீதி, நெறுறண.

கருவிய நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00246141
இல.21, ஆம்பலியான வீதி, நெறுறண.

நிலவா விக்ரமசிங்க நெறுறண்ஸ்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00246827
இல.1058, பிடுமுல்ல, பாதுக்க.

டு லண்.ஏன் ஏன்னோன் நெறுன்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00247013
இல.1/26, கொழுப்பு வீதி, வாரியகொட, அலவல.

மந்தாரலி ஸ்டார்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00247722
இல.105/C, ஸ்ரீ சோமரத்ன வீதி, நெறுறண.

நிரிஞ்ச ஏட்.கிரைஸ்லர்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00247788
இல.21, அப்புஹேன வத்த, வத்தளை.

ஏழுதலாவன் லமிட்
(நிறைவுடைய) விலிட்.பட்.
PV 00248201
இல.65, சந்தர உடயன, பலபிட்டிய, நெறுறண.

சமய கட்டளைப்படி
செல்வி சுகன்யா.என்.ஸ்
(பிஎஸ்ஸி) லண்டன்
(தலைவரும் பெற்றக் கம்பனி செயலாளர்)
நெறுறண
horanatax.com
0703302300 - 15
0774464294

விளையாட்டு

ஆட்டத்தை குழப்பிய மழை

இலங்கை அணி 162 ஓட்டங்களால் முன்னிலை

இலங்கைக்கு சாதகமாக சென்று கொண்டிருந்த போட்டியின் இடையே மழை வந்து குறுக்கே நேற்றைய ஆட்டம் பாதியிலேயே நிறுத்தப்பட்டது.

ஆட்டம் நிறுத்தப்படும்போது 9 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் இலங்கை அணி 162 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

போட்டியின் மூன்றாம் நாளான நேற்று மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்தது.

113 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகளின் ஜேசன் ஹோல்டர் 36 ஓட்டங்களையும், கோர்ன்வோல் 39 ஆகியோரின் ஓட்டங்களுடன் 9 விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் 224 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் ஜோஸ்வா த சில்வா 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது நிற்க, அப்போது மழை குறுக்கிட்டது.

இந்த மழை நீண்ட நேரம் பெய்ததால் மைதானத்தின் ஈரப்பதம் அதிகரிக்க போட்டியை நிறுத்துவதென நடுவர்கள் முடிவெடுத்தனர். இதனையடுத்து மூன்றாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

Powered by
CDB
Your Friend

அக்கரைப்பற்று ஹிஜ்ரா கழகம் சம்பியன்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் ஹிஜ்ரா இளைஞர் கழகம் 134 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கிங் வொரியஸ் இளைஞர் கழகம் 61 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சிற்றி இளைஞர் கழகம் 31 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதில் 18 இளைஞர் கழகங்கள் பங்குபற்றின. அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி சமீலுல் இலாஹி, இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எல்.பி.முஹைமின் ஆகியோரின் ஒருங்கிணைப்பில், அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் தலைவர் எம்.எம். றுக்ஷான் தலைமையில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இறுதிநாள் நிகழ்வுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

6 விளையாட்டு சங்கங்களின் பதிவு ரத்து

ஆறு தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகளை விளையாட்டுத்துறை அமைச்சு இரத்துச் செய்கின்றது.

கடந்த சில வருடங்களாக எந்தவொரு செயற்பாட்டையும் வெளிப்படுத்தாத மற்றும் நிரந்தர முகவரியை ஏற்படுத்த தவறிய ஆறு தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவை நீக்குவதற்கு விளையாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை பவர்போட் சங்கம், இலங்கை யூனிஃபை சங்கம், ஸ்ரீலங்கா சம்போ சங்கம், இலங்கை ஜூடிஜட்சு சங்கம், இலங்கை ஸ்கறொ பிள் சங்கம் மற்றும் இலங்கை பிரிட்ஜ் சங்கம் ஆகிய வையின் பதிவுகளே இரத்துச் செய்யப்படுகின்றது.

6 தேசிய விளையாட்டு சங்கங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படுவதன் மூலம் விளையாட்டு அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டு சங்கங்களின் பட்டியலில் 71இல் இருந்து 65 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை போல்ரும் நடன கூட்டமைப்பை விளையாட்டுத் துறை அமைச்சகம் முன்பு ரத்து செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பல்கேரியாவில் பஸ் விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் 46 பேர் பலி

மேற்கு பல்கேரியாவில் பஸ் லொன்று நேற்று செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகி தீப்பற்றி எரிந்ததில் 12 சிறுவர்கள் உட்பட குறைந்தது 46 பேர் பலியாகியுள்ளனர்.

தலைநகர் சோபியாவின் தென் மேற்கே பொஸ்னெக் கிராமத்திற்கு அருகில் துருக்கியிலிருந்து வட மசிடோனியா நோக்கிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதையடுத்து அந்த பஸ்ஸில் பயணித்த 7 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த பஸ் விபத்து மற்றும் அது தீப்பற்றி எரிந்தமைக்கான காரணத்தைக் கண்டறிய தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வட மசிடோனியா பிரதமர் லொரான் லயேவ் இந்த விபத்துத் தொடர்பில் பல்கேரிய பிரதமரை தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார்.

மரண அறிவித்தல்

அன்னை மடியில்
12 - 08 - 1938

அன்புடன் அடியில்
21 - 11 - 2021

திருமதி
கமலேஸ்வரி நாகராசா

மட்டக்களப்பு புளியங்தீவைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கொழும்பு நாரகென்பிட்டி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி நாகராசா அவர்கள் 21-11-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இயற்கை எய்தினார். அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராசா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி குணரட்னம் தம்பதிகளின் மருமகளும். காலஞ்சென்ற நாகராசா (முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், நரேஷ்குமார் (லண்டன்), கோணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். பத்மாதேவி (லண்டன்), நிருபாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியும், பவித்திரன், கிரிஷா, நவிஸ்கண்ணா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24-11-2021 இன்று புதன்கிழமை ஜெயந்த மலர்ச்சாலையில் காலை 8.30 முதல் இரவு 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 25.11.2021 வியாழக்கிழமை காலை 10.30க்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை பொது மயானத்தில் மதியம் 12.30 மணிக்கு தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகவல்: குடும்பத்தினர்

நரேஷ்குமார் – மகன் : Mobile : +447900383380
கோணேஸ்வரன் – மகன் : Mobile : +447960165777
பத்மாதேவி – மருமகள் : Mobile : +447917733909

சீனாவில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டிடம் இடிந்து விழுந்ததில் 4 பேர் பலி



தென் சீன மாகாணமான ஜியாங்ஸியில் தொழிலாளர்கள் தங்குமிட கட்டிடமொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடிந்து விழுந்ததில் குறைந்தது 4 பேர் பலியாகியுள்ளனர்.

கான்ஜியாங் மாவட்டத்திலுள்ள 6 மாடிக் கட்டிடத்தின் ஒரு பகுதியே இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

அந்தக் கட்டிடத்தில் மருந்துத் தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வந்த தொழிலாளர்கள் தங்கியிருந்ததாகவும் அவர்களில் பலர் வயோதிபர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கையில் தராதரங்கள் எதுவும் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிலுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு நிதிவசதியளித்தவருக்கு எதிராக தடை

அமெரிக்கா விதிப்பு

அமெரிக்காவானது ஆப்கானிஸ்தானில் செயற்படும் ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்பைக் கொண்ட ஐ.எஸ்.ஐ.எஸ்.-கே குழுவிற்கு நிதிவசதியளித்து வருவதாக குற்றஞ்சாட்டி தனிநபர் ஒருவருக்கு எதிராக நேற்று முன்தினம் திங்கட்கிழமை தடைகளை விதித்துள்ளது.

ஆப்கானில்தான் தலைநகர் காபூலில் அண்மையில் இடம்பெற்ற ஒரு தொகைத் தாக்குதல்களின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ்.-கே குழுவே உள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்க திறைசேரித் திணைக்களம் இஸ்மதுல்லா கலோலாய் என்ற மேற்படி நபர் துருக்கியை அடிப்படையாகக் கொண்ட ஹவாலா என அழைக்கப்படும் பணப் பரிமாற்ற வலைப்பின்னலொன்றை செயற்படுத்தி ஆப்கானிஸ்தானிலுள்ள ஐ.எஸ். குழுவினருக்கு பணப் பரிமாற்றத்தை மேற்கொண்டு வருவதாக குற்றஞ்சாட்டியே மேற்படி தடைகளை விதித்துள்ளது.

உலகச் செய்திகள்

தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி சன் டோ ஹவான் காலமானார்

தென்கொரியாவில் 1979 ஆம் ஆண்டு பாரிய ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் கிளர்ந்தெழுவதற்கு வழிவகுத்த இராணுவ ஆட்சி கவிழ்ப்பையடுத்து அந்நாட்டை இரும்புக் கரம் கொண்டு ஆட்சி செய்த அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதி சன் டோ ஹவான் தனது 90 ஆவது வயதில் நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதியான சன் 1980 களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட குவாங்ஜு படுகொலைகளுக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி குற்றச்செயலுக்காக அவருக்குப் பின்னர் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd. at No. 267, Raja Mawatha, Ekala, Ja-Ela. On Wednesday, November 24, 2021